விலை ரூபா: 10.00


Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆனி 06 வெள்ளிக்கிழமை (20.06.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 184




## மன்னாரில் கிளைமோர் 2 பொதுமக்கள் படுகாயம்

(கிளிநொச்சி)

மன்னாரில் ஆழ ஊடுருவும் படையினரின் கிளைமோர்த் தாக்குதலில் இரண்டு அப்பாவிப் பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர்.

இலுப்பைக்கடவைக்கு அண்மையான தேத்தாவடிப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் ஊர்தியில் சென்று கொண்டிருந்த பொதுமக்கள் மீதே இக் கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக மன்னார் செய்திகள் தெரிவித் (10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.சிறைச்சாலை வாகனங்களுக்கு இராணுவப் பாதுகாப்பை பெறத் தீர்மானம்

(கொழும்பு)

யாழ்ப்பாணச் சிறைச்சாலையிலிருந்து நீதிமன்றுக்குச் சிறைச்சாலை பஸ் மூலம் சந்தேக நபர்களை அழைத்துச் செல்கையில் பொலிஸாரின் காவலுக்கு மேலதிகமாகப் படையினரின் பாதுகாப்புப் பணியினையும் பெற்றுக் கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என யாழ்.சிறைச்சாலைப் பேச்சாளர் தெரிவித்துள்ளதாக லங்கா தீப செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த 13 ஆம் திகதி சிறைச்சாலை பஸ்ஸில் பருத்தித்துறை நீதிமன்றுக்கு சந்தேக நபர்களை அழைத்துச் செல்கையில் இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்திற்குப் பின்னர் நீதிமன்றக் கட்டளையின் பிரகாரமே இத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை (10 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டாரில் தீ விபத்து இலங்கையர் ஐவர் பலி


(கொழும்பு)

கட்டாரிலுள்ள விடுதி ஒன்றில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட தீ விபத்தில் 5 இலங்கையர்கள் உயிரிழந்துள்ளனர். அத்துடன் இச் சம்பவத்தில் மேலும் 2 இலங்கையர் பலத்த காயமடைந்துள்ளதாக கட்டாரில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் தொழிலாளர் நலன்புரி அதிகாரி கிருஷாந்த கேரத் தெரிவித்தார்.

தீ விபத்தில் உயிரிழந்த ஐவரும் எம்பிலிப்பிட்டி, அக்குரஸ்ஸ, (10 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப்புலிகளுடன் பேசத் தயார்

# ஆனால் நிபந்தனைகள் விதிக்கப்படும்



## பசில் ராஜபக்ஷ எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

**விடுதலைப்புலிகள் பெரும்பாலான தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற அடிப்படையில் அவர்களுடன் பேச அரசாங்கம் தயார். ஆனாலும் நிபந்தனைகள் செயற்படுத்தப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஆங்கில நாளேடு ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.** (10 ஆம் பக்கம் பார்க்க)

## உலக அகதிகள் தொகை திடீரென அதிகரிப்பு

(கொழும்பு)

உலகளாவிய ரீதியில் 11.4 மில்லியன் மக்கள் தமது தாய் நாட்டை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களில் 26 மில்லியன் பேர் சொந்த நாட்டிலேயே இடம்பெயர்ந்து வாழ்வதாகவும் ஐக்கிய நாடுகள் சபை அறிக்கையிட்டுள்ளது.

உலக அகதிகளில் அரைப் பங்கினர் ஈராக், ஆப்கானிஸ் (10 ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே...

தரம்–05 புலமைப் பரிசில்
பயிற்சி வினாத்தாள் – 05
பகுதி –II

## யுத்த செய்திகளின் வெளியீடு குறித்து பாதுகாப்பு அமைச்சு அறிவுறுத்தல்

### வாபஸ் பெறக் கோருகிறது சு.ஊ.அ.

(கொழும்பு)

முக்கிய இராணுவத் தகவல்கள் வெளியிடப்படுவதன் மூலம் தேசிய பாதுகாப்புக்குப் பங்கம் ஏற்படும் எனவும் பயங்கரவாதத்திற்கு இதன் மூலம் உந்துசக்தி அளிக்கப்படும் எனவும் இது ஒரு இராஜதுரோகச் செயல் எனவும் பாதுகாப்பு அமைச்சின் இணையத் தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது மக்கள் தகவல்கள் அறிந்து கொள்வதற்கான உரிமை இதன் மூலம் மறுக்கப்பட்டுள்ளதாக சுதந்திர ஊடக அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

யுத்த தந்திரோபாயங்களை விமர்சித்தல், இராணுவப் படையினரின் பதவியுயர்வுகள், யுத்த தளபாடக் கொள்வனவு, யுத்தத்திற்கு எதிரான கருத்துக்கள், உத்தியோகபூர்வப் பேச்சாளர்களிடம் தகவல்களைப் பெற்றுக் கொள்ளல் போன்றவற்றில் ஊடகங்கள் ஈடுபடக் கூடாதென இணையத் தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலைமை சர்வதேச யுத்த செய்தி வெளியீடு மற்றும் ஜனநாயக முறைமை என்பவற்றிக்கு முரணானது என சுதந்திர ஊடக அமைப்புச் சுட்டிக் (10 ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டு பொலிஸார் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டம் கல்முனையில் நேற்று அடையாளம் தெரியாத நபர்களினால் 2 பொலிஸார் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் இருந்து கல்முனை நீதிமன்றத்திற்கு வழக்கு விசாரணையில் முன்னிலையாவதற்கு மோட்டார் சைக் (10 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரிடமுள்ள ஆயுத விபரங்கள் புலிகளுக்கு இலகுவாக கிடைக்கின்றன

### அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

படையினரிடமுள்ள ஆயுதங்கள் குறித்த விபரங்கள் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு இலகுவில் கிடைப்பதாக அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியுள்ளதாவது,

இலங்கையில் நிலவும் பயங்கரவாதத் தாக்குதல்களை முறியடிக்கப் படையினர் உயிரைக் கூடப் பொருட்படுத்தாமல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

படையினருக்குத் தேவையான ஆயுதங்களை முன்னர் தனியார்துறை தரகர்களே ஆயுத வியா (10 ஆம் பக்கம் பார்க்க)

## 73 ஆயிரம் இலங்.தமிழ் அகதிகள் தமிழ்நாட்டில் அகதிகளாகத் தஞ்சம்

### முதலமைச்சர் கருணாநிதி தெரிவிப்பு

(சென்னை)

தமிழ்நாட்டிலுள்ள 117 அகதிகள் முகாம்களில் 73 ஆயிரத்து 433 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாகத் தங்கியுள்ளதாகத் தமிழக முதல்வர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

அகதிகள் என்ற போர்வையில் இந்தியாவுக்குள் ஊடுருவி இந்திய இறையாண்மைக்கு ஊறு விளைவிப்போரை அனுமதிக்க முடியாது. அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

தீவிரவாத அமைப்புக்கள் தமிழ்நாட்டில் காலூன்ற எந்த வகையிலும் இடமளிக்காது பாதுகாப்புப் படையினர் இரும்புக் கரம் கொண்டு அடக்க வேண்டும் என்றும் கூறினார்.

சென்னையில் (10 ஆம் பக்கம் பார்க்க)




உரும்பிராய் இந்துக் கல்லூரியின் ஆசிரியை திருமதி விஜயானந்தி ஜெகதீஸ்வரனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நேற்று தோண்டி எடுக்கப்பட்டது. யாழ். நீதிவான் வசந்த சேனன், சட்ட வைத்திய அதிகாரி ஆகியோர் முன்னிலையில் தோண்டி எடுக்கப்பட்ட சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஆசிரியையின் சடலம் தோண்டி எடுக்கப்படுவதையும், விசாரணைகள் இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்.

# 6 வீத மக்களுக்காக 30 வீத நிலப்பரப்பை விடுதலைப் புலிகள் கோருவது நியாயமற்றது

## பேர்னாட் குணதிலக தெரிவிப்பு

நாட்டின் 6 வீத மக்களுக்காக தமிழீழ விடுதலைப் புலிகள் 30 வீதமான நிலப்பரப்பை கோரி நிற்பதாகவும் இது நடைமுறைச்சாத்தியப்பாடற்ற ஓர் கோரிக்கை எனவும் அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் பேர்னாட் குணதிலக தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர்கள் 12 வீதமளவிலேயே வாழ்வதாகவும் அதில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் தற்போது குறித்த பிரதேசங்களை விட்டு வெளியேறி வாழ்வதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமெரிக்க தொலைக்காட்சிக்கு அளித்த விசேட நேர்காணலின்போது அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவர் பேர்னாட் குணதிலக இந்த தகவலைகளை வெளியிட்டுள்ளார்.

2 ஆயிரம் வருடங்களாக அனைத்து இன மக்களும் ஒற்றுமையுடன் இலங்கையில்வாழ்ந்து வந்தனர். பெரும்பான்மையான தமிழர்கள் விடுதலைப் புலிகள் கோரும் நிலப்பரப்புக்கு வெளியில் வாழ்ந்து வருகின்றனர்.

உலகமே கிராமமாக மாறிக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் இனத்துவ ரீதியில் பிரதேசங்களை பிரித்துக் கொடுப்பது சாத்தியமற்றதொன்று. நடைமுறைசாத்தியப்பாடற்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கையை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது கிழக்கில் அதிக எண்ணிக்கையிலான முஸ்லிம்கள் வாழ்ந்து வருவதாகவும் இவ்வாறானதொரு சூழ்நிலையில் கிழக்கை எவ்வாறு தமிழர்கள் செறிந்து வாழும் வடக்குடன் இணைப்பது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மனித உரிமைகள் தொடர்பாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை தாம் ஏற்றுக்கொள்வதாகவும் எனினும் தமிழீழ விடுதலைப் புலிகளின் மனித உரிமை மீறல்கள் குறித்து கண்காணிப்பதற்கு இவ்வாறானதொரு பொறிமுறை இல்லை'என்பதையும் நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தை மேசைக்கு வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் விடுதலைப் புலிகள் தமது படைப்பலத்தை வலுப்படுத்திக் கொள்ள முயற்சிக்கின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்திலுள்ள வைத்தியசாலைகள் மற்றும் பாடசாலைகள் அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்படுகின்றது.

இதன் மூலம் பொதுமக்களுடனான உறவை அரசாங்கம் கட்டியெழுப்பி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(ச-5)

# இலவச உலருணவு நிவாரண விநியோகம் அரிசியின் விலை 2 ரூபாயால் குறைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ளூரில் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு மே,யூன் மாதங்களுக்கான இலவச உலருணவு நிவாரண விநியோகத்தை இன்று முதல் ஆரம்பிக்குமாறு சகல ப.நோ.கூ.சங்கங்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

மே மாத விநியோகத்திற்கு அரிசி(நாடு), மா, சீனி, பருப்பு ஆகியனவும் யூன் மாத விநியோகத்திற்கு தீட்டல் /உடையல் அரிசி, மா, சீனி, பருப்பு ஆகியனவும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கற்கட்டளைகள் வழங்கப்பட்டிருந்தது.

அத்துடன் மே, யூன் மாதத்திற்கு நிவாரண விநியோகத்திற்கான அரிசி வகைகளுக்கு நேற்று விலைக்குறைப்பு செய்யப்பட்டுள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி விலைக்குறைப்புக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட மேலதிக அரிசி ஒதுக்கீடு, மீளாய்வு செய்யப்பட்ட விநியோகப்பட்டியல் ஆகியவற்றை மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் இன்று பெற்று மே, யூன் மாத விநியோகத்தினை ஆரம்பிக்குமாறும் அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

வழங்கப்பட்ட சமுர்த்தி நிவாரணத்திற்குரிய அரிசிக்கும் மேற்படி விலைக் குறைப்பு பொருந்துவதால் அதற்குரிய மேலதிக அரிசியினைப் பெற்று சமுர்த்தி உதவி ஆணையாளரிடம் மீளாய்வு செய்யப்பட்ட விநியோக அட்டவணையைப் பெற்று விநியோகத்தை மேற்கொள்ளுமாறும் அரசாங்க அதிபர் அறியத்தந்துள்ளார்.

மீளாய்வு செய்யப்பட்ட மே,யூன் மாதங்களுக்கான இலவச உலருணவு நிவாரண பொருள் விநியோகப்பட்டியல் வருமாறு,

### இலவச உலருணவு நிவாரண விநியோக அட்டவணை - மே 2008

| பொருள் | விலை (ரூபா) | 1 அங்கத்தவர் (Kg) | 02அங்கத்தவர் (Kg) | 03அங்கத்தவர் (Kg) | 04அங்கத்தவர் (Kg) | 05ம்அதற்குமேல் (Kg) |
|---|---|---|---|---|---|---|
| அரிசி நாடு | 70.00 | 2.325 | 5.100 | 7.350 | 7.700 | 9.225 |
| மா | 77.25 | 1.000 | 1.500 | 2.000 | 3.000 | 4.000 |
| சீனி | 67.00 | 1.000 | 1.500 | 1.500 | 2.500 | 3.000 |
| பருப்பு | 138.00 | 0.200 | 0.300 | 0.500 | 0.500 | 0.750 |
| பெறுமதி | - | 336.00 | 616.00 | 840.00 | 1008.00 | 1260.00 |

### இலவச உலருணவு நிவாரண விநியோக அட்டவணை - யூன் 2008

| பொருள் | விலை (ரூபா) | 1 அங்கத்தவர் (Kg) | 02அங்கத்தவர் (Kg) | 03அங்கத்தவர் (Kg) | 04அங்கத்தவர் (Kg) | 05ம் அதற்குமேல் (Kg) |
|---|---|---|---|---|---|---|
| அரிசி தீட்டல்/ உடையல் | 68.00 | 2.400 | 5.250 | 7.575 | 7.925 | 9.500 |
| மா | 77.25 | 1.000 | 1.500 | 2.000 | 3.000 | 4.000 |
| சீனி | 67.00 | 1.000 | 1.500 | 1.500 | 2.500 | 3.000 |
| பருப்பு | 138.00 | 0.200 | 0.300 | 0.500 | 0.500 | 0.750 |
| பெறுமதி | - | 336.00 | 616.00 | 840.00 | 1008.00 | 1260.00 |

(ச)

## அழைப்புக் கட்டளை இல.16 பிரிவு 55

யாழ்ப்பாணம் என்னுமிடத்திலுள்ள மாவட்ட நீதிமன்றத்தில்

நந்தகோபன் நிசாந்தினி
சிவன்கோவிலடி, புத்தூர் மேற்கு,
புத்தூர்.
-வழக்காளி

எதிர்

வழ.இல. மணநீக்கம் /857

நடராசா நந்தகோபன்

பூமகள் முன்பள்ளி அருகில்,
சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.
-எதிராளி

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளிக்கு

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி தனக்கும் உமக்குமிடையே 24-06-2006ஆம் திகதி நடைபெற்ற திருமணப்பதிவை இரத்துச் செய்வதற்காக இந் நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால் அதற்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின் 2008 ஆம் ஆண்டு ஆனி மாதம் 25 ஆந் நாளன்று அல்லது அதன் முன்னர் நீதிமன்றில் கோப்பிடும்படி இத்தால் நீவீர் தேவைப்படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவீர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரர் இல்லாமலே மேற்கொண்டு நடாத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவீர் இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில் சட்ட முறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விபரக் குறிப்பொன்றை கோப்பிடுமாறு நீவீர் மேலும் தேவைப் படுத்தப்படுகின்றீர்.

குறிப்பு: விளக்கத்தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு கூப்பிடும் திகதி பற்றிய அறிவித்தலை நீவீர் பெற விரும்பினால் பதிவு செய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும்,80ஆம் பிரிவின் மூலம் நீவீர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி

2008 ஆண்டு ஆனி மாதம் 04ஆந் திகதி

பதிவாளர்

வரைபு:
**சி.வீரகத்திப்பிள்ளை**
வழக்காளியின் பதிவுபெற்ற சட்டத்தரணி

(1370)

## நூல்வெளியீடு

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை கலைவட்டம் நடாத்தும் காண்பியக்கலை தொடர்பான குமுதினி சோமசுந்தரக்குருக்களின் 'யாழ்ப்பாணப் பண்பாட்டில் மடமும் மடக் கட்டடக் கலையும்', சா.சிவரூபனின் 'பதிப்போவியம் ஓர் அறிமுகம்' எனும் இரு நூல்களின் வெளியீட்டு வைபவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு புதிக கலைப்பீட கட்டட முகப்பிடத்தில் நடைபெறவுள்ளது. (ஓ-7)

## பொது விரிவுரைத் தொடர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் புறநிலைப் படிப்புக்கள் அலகின் ஏற்பாட்டில் சுகவாழ்வு எனும் தலைப்பிலான பொது விரிவுரைத் தொடர் -08 நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவப் பீடாதிபதி கலாநிதி க. சிவபாலன் தலைமையில் இடம் பெறவுள்ள இவ் விரிவுரையினை யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை மகப் பேற்றியல் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி ஏ. சிறிதரன், 'குடும்பத் திட்டமிடலும் சுக வாழ்வும்' எனும் தலைப்பில் ஆற்றவுள்ளார்.

ஆர்வமுள்ள பொதுமக்கள், பல்கலைக்கழகச் சமூகத்தினர் வருகை தந்து பயன்பெற முடியும் என புறநிலைப் படிப்புக்கள் அலகின் இணைப்பாளர் இரா.சிவச்சந்திரன் தெரிவிக்கின்றார். (ச)


## தேவை

யாழ்.நகர் மத்தியில் இயங்கும் வைத்திய நிபுண சேவை (கிளினிக்) நிலையத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

1.கணக்குப் பதிவாளர் (பெண்) 2.உதவி மருத்துவத்தாதி (Asst. Nurse) (பெண்)
3.பார்மசி உதவியாளர் (பெண்)
4.மேற்பார்வையாளர் (ஆண்/பெண்) 40 வயதுக்கு மேற்பட்டவர்கள்
5.குழந்தைகள் பிடவை விற்பனையில் அனுபவம் உள்ளவர்கள் (பெண்)

மேற்படி பதவிகளுக்கு யாழ்.மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

இடம்:- **சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(இரட்ணம் பார்மசி அருகில்)
T.P:-021-222 9960

நேர்முகத்தேர்வு:- காலம்-22.06.2008 (ஞாயிறு)
காலை 10 மணிக்கு
(நேரில் வரவும்)

(1366)

## Dr. பஸ்லூர் ரஹ்மான் (M.B.B.S., M.D.,M.V., PhD., Acu.) அவர்களின் மருத்துவ நிகழ்ச்சி

Dr.பஸ்லூர் ரஹ்மான் (M.B.B.S., M.D., M.V., PhD., Acu.) அவர்களின் மருத்துவ நிகழ்ச்சி தமிழன் தொலைக்காட்சியில் இதுவரை ஞாயிறு தோறும் இரவு 11.00 மணிக்கு நடைபெற்ற Dr. பஸ்லூர் ரஹ்மான் அவர்களின் மருத்துவ நிகழ்ச்சி தற்போது வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு மாற்றப்பட்டுள்ளது.

அடுத்து வரும் நிகழ்ச்சிகளில் இதுவரை அறிந்திராத பல முக்கியமான விடயங்கள் பற்றி விளக்கம் தர இருக்கிறார். இதனைப்பார்த்து உங்களுக்குரிய சந்தேகங்களை தெளிவு படுத்திக் கொள்வதற்கு நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி, கடித முகவரிகள்;

தொலைபேசி:- 00919840472736
00919840498898

கடித முகவரி:- Dr. பஸ்லூர் ரஹ்மான்
No.17, கஸ்ரியன் பீச்றோட்,
சாந்தோம்,
சென்னை. 600004
இந்தியா.

(C-1256)

# இன்று ஒரு தகவல்

## அனுசரித்துப் போவது எப்படி ?

இன்று பலபேர் சகமனிதர்களுடன் எப்படிப் பழகுவது? அடுத்தவர்களை எப்படி அனுசரித்து நடந்து கொள்வது? என்று தெரியாமல் சங்கடப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். வசதி வாய்ப்பெல்லாம் சரியாக இருக்கும்... ஆனால் வாழ்க்கை சரியாக இருக்காது... இன்னொருவரிடம் எப்படிப் பேசுவது, பழகுவது என்று தெரியாததால் தான் இந்த அவஸ்தை! சரி... இந்த அவஸ்தையில்லாமல் வாழ்வது எப்படி? இதற்கு அனுபவசாலிகள் சில வழிமுறைகளைச் சொல்லியிருக்கிறார்கள்.

முதலில் நம்முடைய நாக்கை நமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும்! வார்த்தைகளைக் கொட்டிவிட்டு பிறகு அதை அள்ளமுடியாமல் கஷ்டப்படக்கூடாது! எப்படி பேசுகிறோம் என்பது முக்கியம்! அன்பாக பேசினால் நன்றாக இருக்கும்... அப்படிப் பேசும்போது ஆதரவாக அவரின் தோள்மேல் ஒரு கையைப் போட்டுப் பேசினால் இன்னும் நன்றாக இருக்கும். இரண்டாவது விஷயம்.

இன்னொருவரிடம் பேசும்போது வாக்குறுதிகளை அள்ளி வீசக்கூடாது. கொடுக்கும் வாக்குறுதிகள் குறைவாக இருக்க வேண்டும்.

அப்படி கொடுத்த வாக்குறுதியை கண்டிப்பாக நிறைவேற்றவேண்டும்! நாம் ஒருவரை பாராட்டுகிறோம் அல்லது அவரைப்பற்றி அபிப்பிராயம் சொல்கிறோம் என்றால் அது ஆக்கபூர்வமாக இருக்க வேண்டும். நம்முடைய பாராட்டு அல்லது விமர்சனம் அடுத்தவருடைய முன்னேற்றத்துக்கு உதவுவது மாதிரி இருக்க வேண்டும்.

நாம் சொல்வதைக்கேட்டு, அவன் தலையில் கைவைத்துக்கொண்டு உட்கார்ந்துவிடக்கூடாது! எப்பொழுதும் உற்சாகமாக இருக்க வேண்டும்... முகம் மலர்ச்சியாக இருக்க வேண்டும்... மனிதன் என்றால் வருத்தம்–கவலை–ஏமாற்றம் எல்லாம் இருக்கத்தான் செய்யும்... அதெல்லாம் மனதிலே இருக்கட்டும்!.

அந்த வருத்தமும்–கவலையும்–ஏமாற்றமும் சேர்ந்து நம் முகத்தில் இருக்கும் மலர்ச்சியை மூடி மறைப்பதற்கு இடங்கொடுக்கக்கூடாது! எந்த விஷயத்தைப்பற்றி யாரிடம் பேசினாலும் வெளிப் படையாகப் பேச வேண்டும்... திறந்த மனதுடன் பேச வேண்டும்... மூடி மறைத்து மென்று முழுங்கிக் கொண்டு இருக்கக்கூடாது!

இன்னொருவரிடம் பேசும் போது விவா தம் பண்ணுங்கள். அது தவறில்லை. ஆனால் வாதாடிக் கொண்டிருக்காதீர்கள்! அதாவது Discuss பண்ணலாம்... Argue பண்ணக்கூடாது!

நம்மிடமுள்ள நல்ல குணங்களை நாமே எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கக்கூடாது... அந்த நல்ல குணங்களே நம்மைப்பற்றி எடுத்துச் சொல்ல வேண்டும்... அது மாதிரி நடந்துகொள்ள வேண்டும்!

அதேமாதிரி அடுத்தவர்களிடம் உள்ள கெட்ட குணங்களைப் பற்றி அவசியமில்லாமல் நாம் பேச வேண்டியதில்லை! உங்களைப்பற்றி யாராவது தவறாகப் பேசுகிறார்களா...? அப்படி அவர்கள் பேசுவதில் உண்மை இல்லையா...?

அப்படியானால் அதை நீங்கள் பொருட்படுத்த வேண்டாம்! விட்டுவிடுங்கள்... அது தானாகப் போய்விடும்! ஒரு நாலைந்து பேரிடம் பேசிக்கொண்டிருக்கிறீர்களா... எல்லோருக்கும் முக்கியத்துவம் கொடுங்கள்! யாரையும் அலட்சியப்படுத்தாதீர்கள்...! தமாஷாகப் பேசலாம். ஆனால் உங்கள் தமாஷ் அடுத்தவர்களை கேலி பண்ணுவதாக இருக்கக்கூடாது!

நமக்குக் கிடைக்க வேண்டியது கிடைக்கவில்லை என்ற தவிப்பு நம்மிடம் இருக்கக்கூடாது. அது தேவையில்லை! உங்கள் செயல்பாடுகள் தெளிவாக இருக்கட்டும். பாராட்டு தானாகவே உங்களைத் தேடிவரும். இன்னொரு மனிதனுடைய மனதில் கௌரவமான ஒரு இடத்தைப் பிடிக்க வேண்டுமானால் நாம் இந்தக் குணத்தையெல்லாம் நம்மிடம் வளர்த்துக்கொள்ள வேண்டும்!

இதெல்லாம் அனுபவசாலிகள் சொல்லியிருக்கும் குறிப்புகள். இந்த குறிப்புகளை சரியாக புரிந்துகொள்ள வேண்டும் அது முக்கியம். தவறாக புரிந்துகொண்டால் என்ன ஆகும் தெரியுமா?

ஒருவர் வந்தார். "சார்... அடுத்தவங்க தோள்மேல கையைப் போட்டுக்கிட்டு அன்பாக பேசவேண்டும் என்று சொன்னீங்க... அப்படித்தான் பேசினேன். அவரின் முதுகைக்கூட தட்டிக்கொடுத்தேன். என் வேலை போய் விட்டது சார்... வீட்டுக்கு அனுப்பிவிட்டாங்க!" என்றார்.

"யாரிடம் அப்படி பேசினீங்க?" என்று கேட்டேன் "என் முதலாளியிடம் சார்!" என்றார் ரொம்ப சோகமாக!

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தமிழ்மொழித் தினம் -2008
# கோட்டமட்டப் போட்டி முடிவுகள்

**நல்லூர் கோட்டம்**

போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு:- அத்துடன் 1ஆம், 2ஆம் இடங் களைப் பெற்றவர்கள் வலயமப் போட்டிக்குத் தெரிவு செய்யப் பட்டுள்ளார்கள்.

**வாசிப்பு** *பிரிவு–1*

கி.சேயோன்–கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை, கி.கிருஷாந்தி–யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை, தே. கிருஷாந்தன்–அரியாலை ஸ்ரீ.பார்வதி வித்தி.

*பிரிவு–2*

ச.அபிசா–நல்லூர் இஸ்தான சி.சி.வித்தி, க.கிருஷாந்தி–கோண்டாவில் இராம கி.ம.வித்தி., த.பானுஜன்–கோண் டாவில் இந்து மகா வித்தி.

**ஆக்கத்திறன் வெளிப்பாடு**

*பிரிவு–1*

இ.பிரபஞ்சன்–ஆனைப்பந்தி மெ. மி. வித்தி., ஆ.ஆரங்கன்–யாழ். இந்து ஆரம்ப பாடசாலை, சு.டிக்சிகா–யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.

* **பேச்சு** *பிரிவு–1*

சா.தேனுசா–யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை, க.மைதிலி–கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை, சோ. மதுசன்–யாழ்.இந்து ஆரம்பபாடசாலை.

*பிரிவு–2*

அ.பவுஸ்ரிகா–அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தி., உ.சாந்திகா–கொக்குவில் இந்துக்கல்லூரி, இ.ஆரூரன்–யாழ்.இந் துக்கல்லூரி.

*பிரிவு–3*

ஜே.மதுசிகன்–கொக்குவில் இந்துக் கல்லூரி, பி.குணவரன்–யாழ். இந்துக் கல்லூரி, ம.லேக்கா–அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தி.

*பிரிவு–4*

அ.உமாகரன்–யாழ்.இந்துக்கல்லூரி, சி.ஜமிலா–கனகரத்தினம் ம.ம. வித்தி., த.நாராஜனி–கொக்குவில் இந் துக்கல்லூரி.

*பிரிவு–5*

த.கலைவாணி–கனகரத்தினம் ம.ம.வித்தி., ச.இராகுல் –கொக்குவில் இந்துக்கல்லூரி, சி.சேகரன்– யாழ். இந்துக்கல்லூரி.

**பாவோதல்** *பிரிவு–1*

வி.வத்சாங்கீதன்–யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை, செ.சுதர்சன்–கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை, ஸ்ரீநிவோதா–கோண்டாவில் இராம கிழ.ம.வித்தி.

*பிரிவு–2*

ர.ரேணுகா–செங்குந்தா இந்துக் கல்லூரி, இ.யனரஞ்சினி–கொக்குவில் இந் துக்கல்லூரி, அ.பிரியங்கா–கொக்குவில் ஞானபண்டிதா.

*பிரிவு–3*

க.ஜஸ்மிதா–கொக்குவில் இந்துக் கல்லூரி, வி.நிவேதினி–யாழ். இந்து மகளிர் கல்லூரி, சே.கம்சளா–கொக்குவில் ஞான பண்டிதா.

*பிரிவு–4*

வே.நாராயனி–இந்து மகளிர் கல்லூரி, இ.சமாந்தி–கொக்குவில் இந்துக் கல்லூரி, சௌ.மேரிஸ வண்யா–கந்தர் மடம் சைவப்பிரகாச வித்தி.

*பிரிவு–5*

ந.கார்த்திகா–கனகரத்தினம் ம.ம.வித்தி., கு.கோபிகா–யாழ்.இந்து மகளிர் கல்லூரி, இ.சண்ஜியா–கோன். இராம கி.ம.வித்தி.

**இசைவும் அசைவும்**

*பிரிவு–1*

பூ.கஜப்பிரியா–யாழ்.இந்து மகளிர் ஆரம்பப்பாடசாலை, ந.வர்ணவி–யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை, உ.மாதவி– கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலை.

**நடனம் தனி** *பிரிவு–1*

கு.பவித்திரா–யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை, கி.கேசாயி–கொக் குவில் இந்து ஆரம்பபாடசாலை. சி.வைஸ் ணவி– யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை.

*பிரிவு–2*

ஜெ.அனோஜா–யாழ்.இந்து மகளிர் கல்லூரி, பு.லிசியா–கொக்குவில் இந்துக்கல்லூரி, து.றெஜினா–கோண். இ.கி.ம. வித்தி.

*பிரிவு–3*

அ.தர்சிகா–கொக்குவில் இந்துக் கல்லூரி, த.சரவண்யா–யாழ்.இந்து மகளிர் கல்லூரி, சி.தீபிகா–கோண்டாவில் இந்து மகா வித்தி.

*பிரிவு–4*

ஜெ.நர்மதா–யாழ்.இந்து மகளிர் கல்லூரி, பா.சரண்ஜா தேவி–கொக்குவில் இந்துக்கல்லூரி, ச.பவிதா–கனகரத்தினம் ம.ம.வித்தி.

*பிரிவு–5*

ந.பிரசாந்தினி–கனகரத்தினம் ம.ம.வித்தி., க.கலைப்பிரியா–கொக்குவில் இந்துக்கல்லூரி, பா.தயாளினி–செங்குந்தா இந்துக்கல்லூரி.

**நடனக்குழு**

*திறந்த போட்டி*

யாழ்.இந்து மகளிர் கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி.

**வில்லுப்பாட்டு**

*திறந்த போட்டி*

கொக்குவில் இந்துக்கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி, நல்லூர் இந்து த.பெ. பாடசாலை.

**விவாதம்**

*திறந்த போட்டி*

யாழ்.இந்துக்கல்லூரி, கனரகரத் தினம் ம.ம.வித்தி., கொக்குவில் இந்துக் கல்லூரி.

**தமிழறிவு வினாவிடை போட்டி**

*திறந்த போட்டி*

யாழ்.இந்துக்கல்லூரி, யாழ்.இந்து மகளிர் கல்லூரி, கொக்குவில் இந் துக்கல்லூரி.

**இசை தனி** *பிரிவு–2*

தே.கனிரதன்–கொக்குவில் இந்துக் கல்லூரி, பி.வருணிஜா–யாழ். இந்து மகளிர் கல்லூரி, க.சுபாங்கன்– யாழ். இந்துக்கல்லூரி.

*பிரிவு–3*

சி.சிவசங்கர்–யாழ்.இந்துக் கல்லூரி, கு.மயூரதி– யாழ்.இந்துமகளிர் கல்லூரி, அ.நிக்சலா–நல்லூர் இஸ்தான சி.சி. த.க.பாடசாலை.

*பிரிவு–4*

சி.நிகேதன்–யாழ்.இந்துக் கல்லூரி, ம.அனுசனா–யாழ்.இந்து மகளிர் கல்லூரி, க.கனுசிகா–கொக்குவில் இந்துக் கல்லூரி.

*பிரிவு–5*

தி.சர்மிளா–கொக்குவில் இந்துக் கல்லூரி, பா.அகலியா–பெரியபுலம் மகாவித்தி., ம.மதிசங்கர்–கோண் இராம.கி.ம.வித்தி.

**இசைக்குழு 1**

யாழ்.இந்துமகளிர்கல்லூரி, கோண்டாவில் இந்து மகாவித்தி., கொக்குவில் இந்துக்கல்லூரி.

*குழு–2*

கனகரத்தினம் ம.ம.வித்தி., யாழ். இந்துமகளிர் கல்லூரி, பெரியபுலம் மகாவித்தி., கொக்குவில் இந்துக் கல்லூரி

**ஆக்கம் எழுத்து** *பிரிவு–1*

இ.கிருஸ்ணாகினி–இந்து ஆரம்ப பாடசாலை, ஈ.கஜீஸ்வரன்– கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை, இ.கரிகரன்– சென்பெனடிக் வித்தி.

**கட்டுரை** *பிரிவு–1*

இ.சங்கீர்த்தனன்–யாழ்.இந்துக் கல்லூரி, ப.கலைவாணி–நல்லூர் இந்து தமிழ் பெண் பாடசாலை, ஜே. நிதர்சினி–உயரப்புலம் மெ.மி.த.க. பாடசாலை.

**கடிதம்**

அ.கசிலினி–கோண்டாவில் இந்து மகாவித்தி., இ.ஜனுசா–செங்குந்தா இந் துக்கல்லூரி, இ.வினு– யாழ். இந்துக்கல் லூரி.

**கட்டுரை, சுருக்கம், கவிதை**

*பிரிவு–4*

க.உஷாந்தன்–யாழ்.இந்துக்கல்லூரி. அ.கஜாபனா–கோண்.இந்து மகா வித்தி.சி.சிவநிஜா–கனகரத்தினம் ம.ம. வித்தி.

**கட்டுரை இலக்கிய**

**சொற்பொழிவு** *பிரிவு–5*

கு.குணதீபன்–யாழ்.இந் துக்கல்லூரி. பு.ஜனனி. கனகரத்தினம் ம.ம. வித்தி.

**குறுநாடகம்** *பிரிவு–4*

அ.அஜந்தா–கொக்குவில் இராம கி.வித்தி., மோ.தனுஜா–கொக்குவில் கிழ.நாமகள் வித்தி., ப.செயந்தினி–செங்குந்தா இந்துக்கல்லூரி.

*பிரிவு–5*

ந.தனுசியா–கோண். இந்து மகா வித்தி., சா.ஜனார்த்தினி–செங்குந்தா இந்துக்கல்லூரி.

**கவிதை** *பிரிவு–4*

ந.பிரியங்கா–யாழ்.இந்து மகளிர் கல்லூரி, ஸ்ரீ.நிவேகா–கொக்குவில் இந்துக்கல்லூரி, பா.சுதர்சினி– கனகரத்தினம் ம.ம. வித்தி.

*பிரிவு –5*

ஜெ.சர்மிளா–யாழ்.இந்து மகளிர் கல்லூரி, ஜெ.திவாகரன்–கொக்குவில் இந்துக்கல்லூரி, பா.ரேகா–கோண். இராம கிரு. வித்தி.

**சிறுகதை** *–பிரிவு–4*

கி.மனோரதி–முத்துத்தம்பி மகா வித்தி., மா.வர்ணபாலன்–யாழ்.இந்துக் கல்லூரி, கு.கார்த்திகா–செங்குந்தா இந்துக்கல்லூரி.

*பிரிவு–5*

செ.சரண்யா–கனகரத்திணம் மகா வித்தி., ஞா.சிந்துஜா–முத்துத்தம்பி மகாவித்தி., து.கஜேந்தினி– செங்குந்தா இந்துக்கல்லூரி.

**இலக்கணப்போட்டி**

*பிரிவு–4*

த.றேமா–யாழ்.இந்துமகளிர் கல்லூரி, க.நதீனா–கோண்.இந்து மகாவித்தி., சு.மயூரதன்–யாழ்.இந் துக்கல்லூரி.

*பிரிவு–5*

இ.இந்துஜா–யாழ்.இந்துமகளிர் கல் லூரி, க.குகதாசன்–யாழ்.இந்துக் கல் லூரி, ச.தஜிபன்– முத்துத்தம்பி மகா வித்தி.

**திறனாய்வுப் போட்டி**

க.ராகசொரூபி–யாழ்.இந்து மகளிர் கல்லூரி, ச.சுதர்சனா–செங்குந்தா இந் துக்கல்லூரி.

## இராசிபலன்

20.06.2008

(ஆனி 06, வெள்ளிக்கிழமை)

பூராடம் முன்னிரவு 08.36 மணிவரை

துதியை பின்னிரவு 2.40 மணிவரை

இராகுகாலம் 10.24-11.54 மணிவரை

சுபநேரம்-05.54-07.24 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | புதிய முயற்சி, கட்டுப்பாடு, போசன சுகம், பிரயாணம். |
| இடபம் | திடீர் நன்மை, முயற்சி தாமதம், திடீர் பயம், உடல்நலக்குறைவு. |
| மிதுனம் | களஸ்திர நன்மை, முயற்சி கைகூடும், விருந்துபசாரம். |
| கடகம் | நோய் குணமடைதல், காரிய சித்தி, தொழில் நன்மை. |
| சிங்கம் | புத்திரரால்கவலை, முயற்சிதாமதம், பணவிரயம், சகோதரர் உதவி. |
| கன்னி | சுபநிகழ்வு, முயற்சி தாமதம், புதிய விடயம், தனவிரயம். |
| துலாம் | நண்பர்கள் சந்திப்பு, முயற்சி கைகூடும், விருந்துபசாரம். |
| விருச்சிகம் | விவாதம், வேலைச்சுமை, சயன சுகம், பணவிரயம். |
| தனுசு | கற்பனை மிகுதி, புதிய முயற்சி, கீர்த்தி, தெய்வசிந்தை. |
| மகரம் | அமைதிக்குறைவு, காரிய அலைச்சல், சுபசெலவு, கடன்பிரச்சினை. |
| கும்பம் | முயற்சி பலிதம், பொருள் சேர்க்கை, பெரியோர் உதவி. |
| மீனம் | அதிகாரம், தொழில் நன்மை, காரிய சித்தி, தேகநலன். |

வளவன்

# யாழ்.வலயப் பாடசாலைகளுக்கிடையிலான நாட்டுக்கூத்துப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

கடந்த புதன்கிழமை வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற யாழ்ப்பாண பாடசாலைகளுக்கிடையிலான வலய நாட்டுக்கூத்துப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

**இசை நாடகம்**

1ஆம் இடம்:- வேம்படி மகளிர் கல்லூரி
2ஆம் இடம்:- யாழ்.இந்துமகளிர் கல்லூரி
3ஆம் இடம்:- நல்லூர் இந்து தமிழ் கலவன் பாடசாலை.

**தென்மோடி**

1ஆம் இடம்:- கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தி.
2ஆம்இடம்:- புனித சம்பத்திரிசியார் கல்லூரி.
3ஆம் இடம்:- பாசையூர் புனித மகளிர் கல்லூரி.

**சிந்து நடனம்**


1ஆம் இடம்:- கொக்குவில் இந்துக்கல்லூரி
2ஆம் இடம்:- யாழ்.இந்து மகளிர் கல்லூரி
3ஆம் இடம்:- ஊரெழு கணேசா வித்தி.

இப் போட்டிகளில் 1ஆம் இடம்பெற்ற போட்டியாளர்கள் எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் மாவட்ட மட்ட போட்டிகளில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (அ-4)

## பால பண்டிதர் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

சைவபரிபாலன சபையினரால் ஆண்டுதோறும் நடாத்தப்பெறும் சைவசித்தாந்த பிரவேச பால பண்டிதர் பரீட்சைகள் யூலை மாதம் 18, 19, 20ஆம் திகதிகளில் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் என சைவ பரிபாலனசபைத் தேர்வுச் செயலர் அறிவித்துள்ளார். (7)



அண்மையில் அகாலமரணமடைந்த இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் வாடிக்கையாளரான விரிவுரையாளர் சாரதா பரம்சோதியினுடைய நஷ்டஈட்டு கொடுப்பனவை கூட்டுத்தாபன யாழ்.கிளையின் நிதியியல் ஆலோசகர் நா.நாகராஜா அவருடைய தாயாரிடம் கையளிப்பதையும் அருகில் உத்தியோகத்தர்கள் பவிதன், செந்தூரன் மற்றும் ரஞ்சன் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

# மாவட்ட மட்ட எழுத்தாக்கப் போட்டி

இன்று யாழ்.இந்துக்கல்லூரியில் நடைபெறும் மாவட்டமட்ட எழுத்தாக்கப் போட்டிக்கு யாழ்.கல்வி வலயத்திலிருந்து தெரிவானவர்களின் விபரம் வருமாறு,

**ஆக்கம் எழுத்து** *பிரிவு -1*
சு.சுபநிலா-புனித ஜோன் போஸ்கோ வித்தி.

**கட்டுரை வரைதல்** *பிரிவு-2*
ப.கதிர்தர்சினி-வேம்படி மகளிர் கல்லூரி.

**கட்டுரை வரைதல்** *பிரிவு-3*
சி.லிங்கேயன்-கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி.

**கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல்** *பிரிவு-4*
அத்தீர் அன்ரனிநிரோயன்-சென்ஜேம்ஸ் மகாவித்தி.

**தமிழியற் கட்டுரைவரைதல், இலக்கியம் நயத்தல்** *பிரிவு-5*
கு.குணதீபன்-யாழ்.இந்துக்கல்லூரி.

**இலக்கணப் போட்டி** *பிரிவு-4*
சோ.ஜதீனா-வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தி.

**இலக்கணப் போட்டி** *பிரிவு-5*
இ.தவராணி- வைத்தீஸ்வரா வித்தி.

**திறனாய்வுப் போட்டி** *பிரிவு-5*
க.இராக சொரூபினி-யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

**குறு நாடக ஆக்கம்** *பிரிவு-4*
றெமிலா ஜெயசீலன்-திருக்குடும்ப கன்னியர்மடம்

**குறுநாடக ஆக்கம்** *பிரிவு-5*
நதனுஷியா-கோண்டாவில் இந்து மகாவித்தி.

**கவிதை யாக்கம்** *பிரிவு-4*
ம.வரதாஜினி-இடைக்காடு மகாவித்தி.

**கவிதையாக்கம்** *பிரிவு-5*
ஜெ.சர்பிலா-யாழ்.இந்து மகளிர்கல்லூரி.

**சிறுகதையாக்கம்** *பிரிவு-4*
ஏ.கஜானனி-சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

**சிறுகதையாக்கம்** *பிரிவு-5*
செ.சரண்யா-கனகரட்ணம் மகாவித்தி.(அ-4)

## வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி

கொக்குவில் பிரதேசத்தில் வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய்க் கெதிரான தடுப்பு மருந்தேற்றல் இன்று வெள்ளிக் கிழமை முற்பகல் 9 மணிமுதல் 10.30 வரை கொக்குவில் கிழக்கு மனோன் மணி சனசமூக நிலையம், அம்மன் கோவில் வீதி, நந்தாவில் வீதி ஆகிய இடங்களிலும் முற்பகல் 10.45 முதல் 12.15வரை கொக்குவில் கிழக்கு காங்கேசன் துறை வீதி, தேவாலயவீதி, கொக்குவில் மேற்கு குளப்பிட்டி வீதி ஆகிய இடங்களிலும் வைத்து வழங்கப்படவுள்ளது. இச் சந்தர்ப்பத்தைப்பயன்படுத்தி தங்களது வளர்ப்புநாய்களுக்கும் மேற்படி தடுப்பூசியினை ஏற்றிக் கொள்ளுமாறு கொக்குவில் பொது சுகாதர பரிசோதகர் யா.நக்கீரன் அறிவித்துள்ளார். (அ-6)




யாழ்.செய்திகள்

# கரவெட்டிப் பிரதேச கலை இலக்கிய விழா

(பருத்தித்துறை)

வடமராட்சி தெற்கு மேற்கு (கரவெட்டி) பிரதேச கலை இலக்கிய விழா இம்மாதம் 28, 29ஆம் திகதிகளில் நெல்லியடி தடங்கன் புள்ளியடி முருகமூர்த்தி ஆலய கல்யாண மண்டபத்தில் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பண்பாட்டுப் பேரணியுடன் ஆரம்பமாகும் 1ஆம் நாள் நிகழ்வுகள் இலக்கிய கலாநிதி பண்டிதர் சச்சிதானந்தன் அரங்கிலே நடைபெறும். இவ்விழாவிலே மீள் எழுச்சித்திட்ட பிரதிப்பணிப்பாளரும் இளைப்பாறிய அரச அதிபருமான எஸ்.விஸ்வலிங்கம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்கிறார். நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர். எஸ்.சேதுராஜா, விக்னேஸ்வராக்கல்லூரி அதிபர் வி.சிவசிதம்பரம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

2ஆம் நாள் நிகழ்வுகள் உடுப்பிட்டி சிவசம்புப் புலவர் அரங்கில் நடைபெறும். யாழ். அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகவும் யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

கலை இலக்கியத்துறைக்கு சேவையாற்றிய 10 கலைஞர்கள் கௌரவிப்பு நிகழ்வு, பிரதேச கலை இலக்கிய போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை வழங்கல், கடந்த ஆண்டு இடம்பெற்ற தமிழ்த்தினப் போட்டியில் தேசிய ரீதியில் வெளியீட்டிய மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வுகளும் இங்கு இடம் பெறவுள்ளன. (7,52)

# ஆதரவற்ற பிஞ்சு உள்ளங்களை அணைத்து நிற்கும் கருணை இல்லம்

## உரும்பிராய் 'கருணை இல்ல' தலைவர் அ.ஈஸ்வரநாதனுடன் நேரடிச் சந்திப்பு

தனது ஆறாவது அகவையை நோக்கி செல்லும் இக் கருணை இல்லம் 2002ஆம் ஆண்டு மார்கழி மாதம் 9ஆம் திகதி திரு.ச.தேவேந்திரம் அவர்களின் நற்பணியின் பலனால் ஸ்தாபிக்கப்பட்டது. உரும்பிராயில் பொழில் பூத்து விசாலமாக விளங்கும் கருணை இல்லம் ஆரம்ப காலத்தில் ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம் அவர்களின் தலைமையில் சிறப்பாக வழிநடத்தப்பட்டது. ஆசிரியமணி அவர்கள் தமது இறுதிக் காலத்தில் உரும்பிராய் இந்துக்கல்லூரி அதிபர் திரு. அ.ஈஸ்வரநாதன் அவர்களை நாடி இவ் இல்லத்தின் தலைமை பொறுப்பை ஏற்குமாறு கூறவே, அதிபர் அவர்கள் அப்பணியை சிரந்தாழ்த்தி ஏற்று இன்று வரையும் அப்பணியை செவ்வனே புரிந்து வருகிறார்.

ஆதரவற்று நிற்கின்ற பிஞ்சு உள்ளங்களை அணைத்து அவர்களிற்கு வாழ்வளித்து அவர்களை சுபீட்சமான எதிர்காலத்திற்கு இட்டுச்செல்லும் மகத்தான பணியை இன்று "கருணை இல்லம்" ஆற்றி வருகின்றது.

இன்று 29 பெண் பிள்ளைகளை கொண்டு இயங்கிவரும் இவ் இல்லம் சிறப்பான தலைமைத்துவத்தின் கீழ் நல்ல முறையில் வழி நடத்தப்பட்டு வருகின்றது. தரம் 4 முதல் 13ஆம் தரம் வரை கல்விபயின்றுவரும் இம் மாணவியர் தத்தமது கடமைகளை தாமாகவே முன்வந்து ஆற்றுகின்ற தன்மையை காண முடிகின்றது.

**இந்துமதச் செல்வாக்கு**

மண்ணின் கலாசாரம், பண்பாடு, விழுமியம் அனைத்தையும் பேணிக் காக்கின்ற ஓர் உன்னத நிலையமாக கருணை இல்லம் திகழ்கின்றது. குறிப்பாக மாணவிகள் அனைவரும் தமது தோற்றத்திலும் சரி செயற்பாடுகளிலும் சரி இந்துமதம் சார்ந்த விழுமியங்களை பேணிக் காக்கும் தன்மை சிறப்பானதாக அமைகிறது.

கருணை இல்லத்தின் சட்டவிதிகள், கோட்பாடுகளின் பிரகாரம் மாணவிகள் அனைவரும் தேவார திருவாசகங்களை ஓதி பிரார்த்



தனைகளில் ஈடுபடுவது மற்றும் அருகிலுள்ள ஆலயங்களிற்கு சென்று வழிபாடு இயற்றுதல் முதலான பக்திபூர்வமான ஆன்மிகச் செயற்பாடுகளில் தம்மை ஈடுபடுத்தி வருகின்ற தன்மை மிகவும் போற்றுதற்குரியதாக அமைகின்றது!

**கல்வியில் சாதனை படைக்கும் மாணவிகள்**

கருணை இல்ல மாணவியர்கள் அனைவருமே அருகில் உள்ள உரும்பிராய் இந்துக் கல்லூரியில் கல்விபயின்று வருகின்றார்கள். அவர்களின் மேலதிகமான கல்விச் செயற்பாட்டிற்காக கருணை இல்லத்திலேயே ஆசிரியர்களை வரவழைத்து கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்கிறார்கள். குறிப்பாக தரம் 4 முதல் சாதாரணதரம் மற்றும் உயர்தரத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் இங்கு உள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாணவிகள் பாடசாலை மட்டத்திலும் மற்றும் ஏனைய மட்டங்களில் நடைபெறும் கல்விசார்ந்த போட்டிகளில் பங்குபற்றி பல்வேறு சாதனைகளை புரிந்துள்ளார்கள். குறிப்பாக 2ஆம் உலக இந்துமாநாடு, வட இலங்கை சங்கீதசபை மற்றும் சைவபரிபாலனசபை முதலான போட்டிகளில் வெற்றியீட்டி இல்லத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்கள்.

**பொழுது போக்குச் செயற்பாடுகள்**


கருணை இல்லத்தின் அமைவிடத்தைப் பொறுத்தவரையில், இல்லத்தைச் சூழ எழில் கொஞ்சும் பூஞ்சோலை இல்லத்திற்கு அழகு சேர்க்கின்றது. அத்துடன் இங்கு மாணவியர் தமது பொழுதுபோக்கு நேரங்களை மிகவும் பயனுள்ளா வகையில் செலவிடுகிறார்கள். அதாவது இல்லத்தை விட்டு வெளியேறும்பட்சத்தில் மாணவியர் தமது சொந்தக்காலில் நிற்பதற்கு ஏற்றவகையில் தொழிற்பயிற்சிகளும் கூட வழங்கப்பட்டு வருகின்றன. உதாரணமாக பெண்பிள்ளைகள் தமது நேரத்தை பயனுள்ளதாக செலவிட நான்கு தையல் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு மாணவிகளின் செயற்பாட்டிற்காக விடப்பட்டுள்ளன. மேலும் தொலைக்காட்சி, வானொலிப் பெட்டிகள் போன்ற சாதனங்களும் மாணவிகளின் பொழுதுபோக்கு அம்சமாக விளங்குகின்றன.

இவ்வாறு விளங்கும் இக்கருணை இல்லத்திற்கு இன்று உள்ளூர் மற்றும் வெளியூர் அன்பர்களின் உதவி உபகாரங்களால் மாணவிகளின் அனைத்து தேவைகளும் திருப்திகரமாக நிறைவேற்றப்படுகின்றது. அந்த வகையில், இங்கு வாழும் பிள்ளைகள் ஓர் ஆதரவற்ற பிள்ளைகள் என்பதற்கு மேலாக ஒரு அன்பான குடும்பமாக வாழ்கின்றனர். அதாவது இல்லத்தின் நிர்வாகத்தினர், ஆசிரியர்கள். ஊழியர்கள் அனைவரும் மாணவிகளை அரவணைத்து அவர்களின் தேவைகளை நிறைவு செய்து கல்வியை போதித்து மாணவியரின் சிறப்பான எதிர்காலத்தை நோக்கி இட்டுச் செல்லும் மகத்தான பணியை ஆற்றிவருகின்றனர்.

சந்திப்பின் தொகுப்பு
**அபி, கவி**

# மீன் பார்வை 12

## நோத் முதல் கோபல்லவா வரை



### இரட்டை ஆட்சி முறை

அவரின் கீழ் வரிதிரட்டும் பணிசெய்த உதவியாளரான அமில்தார் உத்தியோகத்தர் மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம், பருத்தித்துறை, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில் இருந்தார்கள். இவற்றுள் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, மல்லாகம் சாவகச்சேரி, ஊர்காவற்றுறை பொலிஸ் கோடு எனப்படும் சிறு நீதிமன்றங்கள் 100 ரூபாவுக் குட்பட்ட சிறு வியாச்சியங்களையும் சிறிய பழி வழக்குகளையும் விசாரித்தன.

இன்னும் யாழ்ப்பாணம் வலிமேற்கு, வலி வடக்கு, வலிகிழக்கு, வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, தீவுப்பற்று என்பன மணிய காரன் பிரிவுகளாயிருந்தன. மணியகாரன் பிரிவுகள் உடையார் விதானைப் பிரிவுகளாக மேலும் பிரிக்கப்பட்டிருந்தன. அமில்தார்கள் வரிதிரட்டிய முறை மிகவும் வருந்தக் கூடியதாயிருந்தது. அவர்கள் குடிமக்களை மிகவும் துன்புறுத்தி உடம்பில் ஊறுசெய்தும் தண்டித்தும் கொடுமையியற்றி வரி திரட்டினார்கள்.

இந்நிலைமை வேறும் பல காரணங்களால் திருப்தியையோ அமைதியையோ நிலைநாட்டப் போதியதாக இருக்கவில்லை. அவசரமாகத் தயாரிக்கப்பட்ட இந்த அடிப்படையில் குடியியற் பாலனத்துக்கும் படைப்பாலனத்துக்கும் இடையில் ஆஎல்லை என்னவென்பனவாதியவை குறிக்கப்படாமையால் நீதி வழங்கல் முதலிய துறைகளில் இரு பகுதியாருக்கும் பெரிய முரண்பாடு ஏற்படலாயிற்று. குடியியற் பாலனம் நல்ல முறையில் அமைக்கப்படாமையால் வருமான உத்தியோகத்தரே குடியியற் பாலனத்தையும் பார்த்து வந்தனர். மாகாண வரி திரட்டும் அதிகாரி எனப்பட்ட (கலெக்டர்) அதிபர் பொலிஸ்காரருக்கும் அதிபராயிருந்தார். முன்னர் முதலிமார்கள் தலைமைக்காரர் என இருந்தவர்களின் அதிகாரங்கள் யாவும் 12-8-1796 இல் அறிவிக்கப்பட்ட பிரசித்தத்தால் நீக்கப்பட்டு அவ்வதிகாரங்கள் வரிதிரட்டும் சிறிய உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டன. முதலியாரின் கடமைகளை அமில்தார் பார்த்து வந்தார். அதனால் முதலிமார்கள் மனமுடைந்து அம்முறைகளை வெறுத்திருந்தார்கள்.

இத்தகைய சீர்கேடுகளால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் வெளிவெளியாக அரசாங்கத்தை எதிர்க்கலாயினர். தமிழ் பேசும் மாகாணங்கள் சிங்களம் பேசும் மாகாணங்கள் என்ற வரையறையின்றி இலங்கையர் என்ற முறையிலேயே எதிர்ப்புக்கள் ஏற்பட்டன. கொழும்பின் அண்மையில் உள்ள றயிகம் கோறளை வாசிகள் வரிகொடுக்க மறுத்தமையோடு வரி திரட்டச் சென்ற வரிக்காரரை பிடித்துக் கட்டிவைத்தார்கள். அதனை அறிந்த அன்றூஸ் படைகள் புடைசூழச் சென்று வரிக்காரனை மீட்டுக் குற்றவாளிகளைத் தண்டித்து அவ்வளவில் கலகம் தணிந்து விட்டதென எண்ணி வெற்றி கரமாக மீண்டார்.

இவ்வாறாக 1-1-1797 இல் மேஜர் ஜெனறல் வெல்போர் எலிஸ் டொயிலி என்பான் ஸ்ருவர்ட் மாற்றம் பெற்றுப்போக அவனிடத்துக்கு வந்தான். இக்காலத்தில் கட்டைக்காடு, வன்னி ஆகிய இடங்களிலும் வரி மறுப்புக் கலகங்கள் ஏற்படலாயின. வன்னியில் சுயவாட்சி நடத்திய பண்டாரவன்னியன் கனன்றெழுந்து அரசாங்க உத்தியோகத்தனான அமில்தாரரை வாளால் வெட்டிக்கொன்றான். யாழ்ப்பாணத்தாரும் வரி கொடாமல்கலகஞ் செய்தமையால் என்ன செய்வது என அதிபர் யேவிஸ் மேலதிகாரிகளுக்கு எழுதினான்.

சிங்கள நாடுகளில் றயிகம், சியன்னே, கேவகம், சல்பிட்டி கோறளைகள் பெரிதும் ஆர்ப்பரித்து எழுந்தபோது வரிக்காரனைக் காப்பாற்றுவதற்கு டொயிலி ஓர் இந்தியத் துப்பாக்கி வீரனை அனுப்பினான். ஆனால் அவ்வூர்வாசிகள் கத்திகள், பொல்லுகள், வாள்கள், ஈட்டிகள் ஆகிய ஆயுதங்கள் ஏந்தியவராய்க் கச்சேரியைச் சூழ நிற்பராயினர். கேவகம், சல்பிட்டி கோறளைகளில் எழுந்த கலகங்களைப் படைகளின் உதவிகொண்டு ஆங்கிலேயர் அடக்கிய போதிலும் கலகக்காரரின் மனவெழுச்சி உணர்ச்சி வயப்பட்டே இருந்தது. எனவே அவர்கள் தென்னைவரி முதலாய அநியாய வரிகளை எதிர்த்து மனுச் செய்வாராயினர். உத்தியோகமிழந்த முதலியார்கள் பின்னணியில் நின்று பொது மக்களை ஏவினார்கள். பொதுமக்கள் ஆங்கிலேயர் ஆட்சி தங்களுக்கு அறவே வேண்டாம் எனக் கூறி நின்றார்கள்.

கலகம் ஏற்பட்ட சமயத்தில் கண்டியரசனும் பிரெஞ்சுக்காரரும் ஆங்கிலேயருக்குத் தீராத தொல்லை கொடுத்தனர். அதனால் ஆங்கிலேயர் படைகள்அங்கும்இங்கும் அனுப்பப்பட்டன. இவ்வித அல்லோல கல்லோல நிலைமை யாவும் அண்றூஸ் அவர்கள் ஆராயாமல் செய்த மாற்றங்களால் உண்டானவை என அறிந்த சென்னை பட்டிண ஆட்பதிவு கோபால் பிரபு 1797ஆம் ஆண்டு யூன் மாதம் 09ஆம் திகதி இலங்கை அரசியல் பரிபாலன முறைகளை விசாரிப்பதன் பொருட்டு ஒரு ஆராய்வு சபையை நியமித்தார். இச்சபையில் டி மோறன், மேஜர் அஜினியூ, றோபேட் அண்றூஸ் ஆகிய பெரியார்கள் இருந்தார்கள். இவர்கள் கலகத்தின் காரணங்களை ஆராய்ந்து கொண்டிருந்த போது கலகம் மேலும் இலங்கையில் பல பாகங்களிலும் பரவலாயிற்று. சென்னைப் பட்டின உத்தியோகத்தர் எங்கும் அவமதிக்கப்பட்டார்கள்.

இவ்வாறாக ஐரோப்பாவில் நிலைமை மாறிற்று. நெப்போலிய மகா யுத்தங்கள் ஓய்ந்தன. இலங்கையை ஆங்கிலேயரே நிரந்தரமாக ஆளுதல் வேண்டும் என்ற குரலும் எழுந்தது. எனவே வர்த்தக சங்கத்தாரிடம் இருந்து இலங்கையை பெறுவதற்கு ஆங்கில அரசாங்கம் முயற்சி செய்தது. ஆனால் வர்த்தக சங்கத்தார் அத்தீர்மானத்துக்கு இடம் கொடுக்கவில்லை. வர்த்தக சங்கத்தார் வியாபாரத்தின் பொருட்டு திருகோணமலையில் தாம் அதிக பணம் செலவு செய்து விட்டதாக கூறி மறுத்தனர். இவ்வித தொந்தரவுகளில் தலையிட விரும்பாத ஆங்கில அரசாங்கம் வர்த்தக சங்கத்தோடு ஒத்துழைத்து இருதரப்பாருக்கும் அதிகாரம் உள்ளதான ஓர் அரசியல் முறையில் இலங்கையைப் பரிபாலித்துக் கொள்ள வழி வகுக்க முற்படுவதாயிற்று. (தொடரும்)

க.சி.குலரத்தினம்

# இசையின் அபூர்வ சக்திகள்

இசை என்பது சர்வ ஜீவராசிகளுக் குள்ளும் புகுந்து மாற்றங்களை ஏற்படுத்த வல்லது. தாவரங்கள் இசையை ரசிக்கின்றன. அதன் மூலம் அவற்றின் வளர்ச்சியும் அதிகரிக்கின்றன என்ற உண்மையை பல விஞ்ஞானிகள் அறிவியல் பூர்வமாக ஆராய்ந்து வெளியிட்டுள்ளார்கள். அவற்றின் சில விபரங்களை இங்கே நோக்குவோம்.

புராதனகாலம் முதல் இசையின் மாயா ஜால சத்திகள் பற்றிய கதைகள் நிறைய உண்டு. இந்தியாவிலும் இசையின் சக்திகளை கூறும் கதைகள் உண்டு. மழை பொழியச் செய்யவும் விளக்கை எரியச் செய்யக்கூடிய ராகங்களும் உண்டு என்றும் இதனை விளக்கும் கதைகளும் உண்டு.

அரச பரம்பரைக் கதைகளை எழுதும் பிரபல கிரேக்க எழுத்தாளரான மான்லி ஹோல்(Manly Hall) என்பவர் பழைய கிரேக்க தேசத்தில் நடைபெற்ற ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுகிறார். ஒரு கோபமுற்ற மனிதன் தனது எதிரியை வாளால் வெட்ட ஆயத்தமானபோது, அருகில் இருந்த ஆன்மீக வாதியான ஒருவர், நிலைமையை உணர்ந்து தனது இசைக் கருவியில் குறிப்பிட்ட ஒரு இசையை இசைத்தாகவும், உடனடியாக அந்த மனிதனின் கோபமும், வெறுப்பும் அகன்று ஒரு சாந்தமான மனிதனாக மாறியதாகவும் கூறுகின்றார். இப்படியான புராதன கதைகளுக்கு சரித்திர பூர்வமான ஆதாரங்கள் இல்லாவிடிலும் இப்படியான ஒரு எண்ணக்கரு ஆதிகாலம் முதல் இருந்து வருகிறது என்பதை அறியக்கூடியதாக உள்ளது. இந்தக்கருத்து நவீன விஞ்ஞானிகளுக்கு சப்தம், இசை சம்மந்தமான ஆராய்ச்சிகளுக்கு ஒரு தூண்டுகோலாக இருந்துள்ளது.

1950இல் டாக்டர் ரீ.சி.என்.சிங் என்பவர் அண்ணாமலைப் பல்கலைக் கழக தாவரவியல் பகுதி தலைவராக இருந்தவர். குழந்தைகளுக்கு கதை கூறுவது போலுள்ள இந்த இசை பற்றிய கதைகளில் ஏதாவது உண்மை உண்டா என்று பரிசோதனைகள் செய்ய எண்ணினார். முதலில் அவர் நீர்த்தாவரமாகிய "ஹைதரில்லா" செடியைப் பயன்படுத்தினார். முதலில் அதன் கலச்சாற்றின் கதிர்வீச்சை நுணுக்குக்காட்டியில் பதிவு செய்தார். இந்த கலச்சாறு தான் சூரிய வெளிச்சத்தின் போது தாவரம் எங்கும் பரவுகிறது. இந்த "ஹைதரில்லா" செடியில் இருந்து 6அடி தூரத்தில் இருந்து சூரிய உதயத்திற்கு 1/2மணி நேரத்திற்கு முன்பிருந்து கரண் டிச்சத்தத்தை ஒலி பரப்பினார். அதன் கதிர் வீச்சு தாமதமாகவே ஏற்பட்டது. பின்னர் தமது உதவியாளரை வயலின் இசைக்கும் படி கூறினார். அவர் வயலின் மீட்டியது தான் தாமதம் கலச்சாற்றின் கதிர்வீச்சு விரைவு படுத்தப்பட்டது.

சிங் இப்பரிசோதனையை ஏனைய தாவரங்களிலும் பரிசோதிக்க எண்ணினார். "மிமோசா" என்ற தாவரத்திற்கு மாயாமாளவகௌளை ராகத்தை இசைக்கச் செய்து பரிசோதித்தார். இரண்டு வாரத்தின் பின் பார்த்த போது ஆச்சரியப்படும் விதமாக வேறுபடுத்தப்பட்ட மற்றைய மிமோசா தாவரங்களை விட 66% வளர்ச்சி கூடுதலாக இருந்தது.

(வடபிராந்திய ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையங்களினால் நாளை இளங் கலைஞர் மண்டபத்தில் நடாத்தவுள்ள இசை நிகழ்ச்சி தொடர்பாக இக் கட்டுரை வெளியிடப்படுகின்றது)

போல்சம் தாவரங்களுக்கு கரஹரப்பிரியா ராகத்தை தினசரி 25 நிமிடங்கள் வீணையில் இசைத்த போது 5ஆம் வாரத்தில் 72% கூடுதலான இலைகளும் 20% கூடுதலான உயரமும் காணப்பட்டது.

இதே மாதிரி பலவித காய்கறித் தாவரங்களிலும் பூந்தாவரங்களிலும் ஆறுக்கும் மேற்பட்ட வெவ்வேறு ராகங்களை புல்லாங்குழல், வயலின், ஹார்மோனியம், வீணை போன்ற இசைக்கருவிகள் மூலம் இசைத்து பரிசோதனையை மேற்கொண்டார். சூரிய உதயத்திற்கு 1/2 மணி நேரம் முன்பாக 1/2மணி நேரம் இந்த இசைப்பரிசோதனையை மேற்கொண்டார்.

தாவரங்கள் இசையை ரசிக்கின்றன. இதன் மூலம் உற்பத்தியை அதிகரிக்கலாம் என்ற தனது முடிவுகளை பீகார் விவசாயக்கல்லூரியின் சஞ்சிகையில் வெளியிட்டுள்ளார். அவர் தமது முடிவுரையில் எந்தவித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்ட முறையில் ஒத்திசைவான சப்த அலைகள் தாவரங்களின் வளர்ச்சியிலும் பூத்தல், காய்த்தல், விதை உண்டாக்கல் களில் ஒரு பெரும் தாக்கத்தை ஏற்படுத்த வல்லது என்று கூறியுள்ளார்.

தனது இந்த பரிசோதனை வெற்றியைக் கொண்டு 1960-1963 வரை வயல்களில் தனது பரிசோதனையைத் தொடர்ந்தார். சென்னை, பாண்டிச்சேரி ஆகிய இடங்களில் 7 கிராமங்களைத் தெரிவு செய்து இந்த வயல் வெளிகளில் ஒலிபெருக்கிக்கருவி மூலம் சாருகேசி ராகத்தை ஒலிபரப்பச்செய்தார். இவ்வயல்களின் விளைச்சல் ஏனைய வயல்களின் சராசரி விளைச்சலை விட 25% முதல் 60% வரை அதிகமாக இருந்ததெனத் தெரிவித்துள்ளார். இது மட்டுமல்ல கடலை, புகையிலைப் பயிர்கள் சாதாரண விளைச்சலை விட 50% அதிகமாக இருந்தது.

பழம்பெரும் நடனக்கலையாகிய பரத நாட்டியத்தை பாடல்கள் சலங்கை என்பன இல்லாமல் ஆடிய போது கால்களின் தாளத்திற்கேற்ப அதிர்வுகள் நிலத்தில் உண்டாக்கி இரண்டு வாரத்துள் அதிகமான பூக்களைப் பூக்கச் செய்தது என்றும் கண்டறிந்தார். இந்திய உபகண்டத்தில் தான் பழைய காலம் தொட்டு நவீன காலம் வரை இசை மூலம் தாவரங்களில் தாக்கம் ஏற்படுத்த முடியும் என்று கண்டறியப்பட்டாலும் மேல் நாடுகளிலும் இதனைத்தொடர்ந்து ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

1950ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் ஆர்தர் லொக்கர் என்ற அமெரிக்க பூ வியாபாரி ஒருவர் தனது பச்சை வீட்டுத் தோட்டத்தில் இசையை ஒலிபரப்பினார். இவரது பூந்தோட்டக்கலைக்கு இசை பெரும் உதவி செய்தது. எனது பூங்கன்றுகள் நேராகவும் விரைவாகவும் வளர்ந்தன. மிக அதிகமாகப் பூத்தன. பூக்களின் நிறங்களும் கண்ணைக்கவரும் படியாக இருந்தன. வழமையிலும் பார்க்க நீண்ட நாட்களாக வாடாமலும் இருந்தன என்று அவர் கூறியுள்ளார்.

டொறத்தி றிரலக் என்ற இன்னுமொருவர் இந்த இசைப்பரிசோதனையைச் செய்து பார்த்தார். வரைபடங்கள் மூலம் தாவரங்களின் இசைக்கவர்ச்சியை நிரூபித்துக் காட்டினார். விஞ்ஞானக் கருவிகள் மூலம் தாவரங்களின் அவற்றின் இலை வளர்ச்சி, வேர், தண்டுவளர்ச்சி, நீர் உறிஞ்சும் தன்மை ஆகியன அளவிடப்பட்டது. இன்னும் கவனிக்கத்தக்க அம்சம் என்னவெனில் ஒலிபெருக்கிக் கருவியை நோக்கி இத்தாவரங்கள் வளைந்து சென்றமைதான். இதே தாவரங்களுக்கு மேலை நாட்டு றொக் இசைகளை இசைத்து பரிசோதித்த போது அவை ஒலிபெருக்கி கருவிக்கு எதிர்த் திசையில் வளைந்து வளர்ந்தது. பின் ஒரு மாதத்தில் வாடி இறந்தது.

தாவர உலகில் இவ்வளவு ஆதிக்கம் செலுத்தும் இசை மனித இதயங் களை எவ்வளவு மாற்றமடையச்செய்யும்?

இருபது வருடங்களுக்கு மேலாக இசையின் ஆற்றலை தனது மாணவர்கள் நோயாளிகள் ஆகியோரில் பரிசோ தனை செய்த H.A லிங்கமன் (H.A.Lingerman) என்பவர் "இசையின் குணப்படுத்தும் சக்தி" என்ற தனது நூலில் விரிவாக விளக்குகிறார். டாக்டர் ஜோன் டய்மண்ட் (Dr.John Diamond) என்பவர் "உங்களுடன் பொய் சொல்லுவதில்லை" என்ற தனது நூலில் தாவரங்களிலும் மனிதரிலும் தான் செய்த பல ஆராய்ச்சிகளை விளக்குகிறார்.


இசை என்பது ஒரு சக்தி வாய்ந்த ஆயுதம். மனித குல முன்னேற்றத்திற்காக இதனைப்பயன்படுத்துவோமாக!

("புதிய உலகத்திற்கான மனித மேம்பாட்டுக் கல்வி" எனும் தலைப்பில் பாங்கொங்கில் நடை பெற்ற கருத்தரங்கில் திருமதி லொறெயின் பறோஸ் ஆற்றிய உரையிலிருந்து)


தமிழாக்கம், தொகுப்பு :-
S.R.சரவணபவன்

### தரம் 05 புலமைப்பரிசில் .......
(6ஆம் பக்கத் தொடர்ச்சி)


சதுரமுகி ஒன்றை ஆக்குவதற்கான சில முகங்கள் நிறந்தீட்டப்பட்ட சில முகங்கள் நிறந்தீட்டப்படாத அட்டைக்கீலம் கீழே தரப்படுகின்றது.




33) இவ்வட்டைக்கீலம் கொண்டு ஆக்கப்பட்ட சதுரமுகியின் கீழ்க் கீறிடுக



34) கீழுள்ள அட்டைகீலத்தைக் கொண்டு தயாரிக்கக்கூடிய உருவத்தின் கீழ்க் கீறிடுக.




35)வெற்றிடத்தில் வரவேண்டிய எண்ணை எழுதுக.




36-40)'நான் கூட்டில் வளர்க்கும் ஒரு கிளியாக இருந்தால்...' என்று ஆரம்பித்து பத்து வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொருவாக்கியமும் நான்கு சொற்களுக்கு குறையாது இருத்தல் வேண்டும்)

# தரம் -5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

5

**பகுதி -II**
**நேரம் – 1 மணி 15 நிமிடம்**

**எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.**
பந்தியை வாசிக்கவும்.

**ஒரு சிறுவன் தனது பயங்கர அனுபவத்தைக்கூறுகின்றான்." அன்று நான் அதி காலையிலேயே சந்தையை நோக்கிப் புறப்பட்டேன் குளத்துக்குக் கிட்ட உள்ள மயானத்தில் ஒரு பூதம் நிற்பதைக் கண்டேன். அதற்கு கால்கள் இருக்கவில்லை. கண்கள் இரண்டும் சிவந்து காணப்பட்டன. அதன் நாக்கு தொங்கிய வண்ணம் இருந்தது. நான் அதனைக் கண்டு அச்சம் அடைந்தாலும் மனம் தளராது அதன் அருகே சென்று 'யார் நீ?' என உரத்துக் கேட்டேன்."**

01) மேலுள்ள பந்திக்கமைய கீழுள்ள தகவல்கள் சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் சரி, பிழை கூறமுடியாவிட்டால் " கூறமுடியாது" எனவும் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.
1.பூதம் குளத்திற்குள் மறைந்து இருந்தது (.............................)
2.பூதத்திற்கு கால்கள் இல்லை (.............................)
3.பூதத்தை கண்ட சிறுவன் அச்சம் அடைந்தான் (.............................)
4.பூதத்தை கண்ட சிறுவன் மனம் தளர்ந்தான் (.............................)
5.பூதம் 'யார் நீ ?' என உரத்துக் கேட்டது (.............................)
6.பூதத்தின் வேட்டைப்பற்கள் நீண்டு வளர்ந்திருந்தன (.............................)
7.பூதம் சிறுவனை தூக்கி விழுங்கியிருக்கும் (.............................)

02)பந்தியலுள்ள வின்வரும் சொற்களுக்குரிய ஆங்கிலப் பதத்ந்த எழுதுக.
1.சந்தை ............................. 2.கால்கள்.............................
3.கண்கள் ............................. 4.நீ .............................
5.காலை ............................. 6.நான்.............................

03)பந்தியிலிருந்து நான்கு வினைச் சொற்கள் தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.
1............................. 2.............................
3............................. 4.............................

04)பந்தியிலிருந்து நான்கு பெயர்ச்சொற்கள் தெரிவு செய்து புள்ளிக் கோட்டில் எழுதுக.
1............................. 2.............................
3............................. 4.............................

05)பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக
1. கடகற்ரை ............................. .2. வாழைப்பழம் .............................
3. மரவேர்............................. 4. நாய்குரைத்தது .............................

***விலைகளை அடிப்படையாகக் கொண்டு கேட்கப்படும் வினாக்களுக்கு புள்ளிக் கோட்டில் விடை அளிக்குக.***

06) 100g பிஸ்கட் எட்டு ரூபாவாயின் 11/2kg பிஸ்கட்டின் விலை எவ்வளவு?.............................
07) 500g பருப்பு 28 ரூபாவாயின் 2kg 250g பருப்பின் விலை எவ்வளவு?.............................
08) ஆறு ரூபா விலையையுடைய 28 தேங்காய்கள் வாங்கியபின் கடைக்காரரிடம் ரூபா 200/- த்தாள் காசு ஒன்றைக் கொடுத்தால் மிகுதியாக எவ்வளவு கிடைக்குமா?............
09) 12 ரூபாய்க்கு புத்தகம் ஒன்றை வாங்கிய பின் 20 ரூபாய் கொடுத்த போது மிகுதியாக உங்களுக்கு 5 ரூபாய் நாணயம் 1உம் 50 சத நாணயங்களுமாக மீதப்பணம் கிடைத்தது. உங்களுக்கு கிடைத்த 50 சத நாணயங்களின் எண்ணிக்கை யாது?.............................
10) 1m வெள்ளைத் துணியின் விலை ரூபா 42/-ஆகும் அதில் 3m 25cm வெள்ளைத் துணியின் விலை யாது?.............................
11) இவ்வினாவில் தரப்படும் ஒவ்வொரு சொற்கூட்டத்திலும் ஒரு சொல்லுக்குக் கருத்து இல்லை. அதனைக் கண்டறிந்து அதன் இலக்கத்தை புள்ளிக் கோட்டில் எழுதுக.
1) 1.கடல் 2.மடல் 3.குடல் 4.சடல் 5.படல் (.........................)
2) 1.மனம் 2.கனம் 3.சனம் 4.சினம் 5.அனம் (.........................)
3) 1.கம்பு 2.அம்பு 3.சிம்பு 4.தும்பு 5.நம்பு (.........................)
4) 1.புருகு 2.அருகு3.பருகு 4.கருகு 5.சருகு (.........................)
5) 1.மரவு 2.தரவு 3.கரவு 4.வரவு 5.பரவு (.........................)

***சரியான விடையின் கீழ்க் கீறீடுக.***

12) கடற்கரை மண்ணின் பண்புகளில் ஒன்றாகக்கருதக்கூடியது.
1.சிறிய துணிக்கை 2.பெரிய துணிக்கை
3.மண்ணீர் அதிகம் 4.மண்வளி குறைவு
13) மீனை நீண்டகாலம் பாதுகாக்க உகந்த முறை எது?
1.பொரித்தல் 2.கருவாடாக்கல்
3.குளிரூட்டல் 4.ரின்னில் அடைத்தல்
14) மின்னிணைப்பிற்கு அவசியமற்ற பொருள் எது?
1.மின்கூள் 2.ஆளி 3.இரும்பாணி 4.மின்கலம்
15) தாவரம் வேர்களினால் பெறும் பயன்கள்?
1.நிலையாக நிற்றல், நீரை உறிஞ்சுதல் 2.வளர்ச்சிடைதல், இனப்பெருக்கம்
3.இனப்பரம்பல், நீரை உறிஞ்சுதல்
4.நிலையாகநிற்றல், இனத்தைப் பெருக்க உதவுவது
16) வாழையில் அதன் இனத்தைப் பெருக்க உதவுவது?
1.கிழங்கு 2.இலை 3.பழம் 4.தண்டு

**ஒரு குடும்பத்தில் பால் குடிக்காதவர் தேநீர் அருந்துவர். பால் குடிக்காதவர் பழமும் சாப்பிடுவர். தேநீரும் பழமும் வெறாதவர் வடை சாப்பிடுவார். பாலும் குடிப்பார் பழம் சாப்பிடுபவர் வடை சாப்பிடார்.**

17) மேலுள்ள பந்திக்கமைய கீழுள்ள கூற்றுக்கள் சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் சரி, பிழை கூறமுடியாவிட்டால் "கூறமுடியாது" எனவும் புள்ளிக்கோட்டில் எழுதுக.
1.வடையும் பழமும் சாப்பிடுபவர் பால் குடிப்பார் (.............................................)
2.தேநீரும் வடையும் பெறுபவர் பழமும் சாப்பிடுவார் (.............................................)
3.பால் குடிப்பவர் வடை சாப்பிடுவார் (.............................................)
4.பால் குடிக்காதவர் வடை சாப்பிடுவார் (.............................................)
5.இக்குடுபம்த்தில் ஒருவர் பால், பழம், தேநீர், வடை ஒன்றுமே சாப்பிடுவதில்லை(............)

***சரியான விடையின் கீழ்க் கீறிடுக.***

18) "ஆழமாறியாமல் காலை விடாதே" எனும் பழமொழியின் கருத்து
1.கடலில் இறங்கி குளிக்காதே 2.ஆழத்தை அறிந்த பின் இறங்கிக் குளி
3.எக்காரியத்தையும் ஆராய்ந்து பார்க்காமல் செய்யாதே
4.எக்காரியத்தையும் காலால் செய்யாதே
19)"போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து" எனும் பழமொழியின் கருத்து
1. உள்ளதை வைத்து திருப்திப்படு. 2. போதுமொன்றால் மருந்து வேண்டாம்
3. சில மருந்துகள் பொன்னாக மாறும் 4. போதுமொன்று நினைத்தால் மருந்து பொன்னாகும்.


20)"பல்லுக் காட்டுதல்' எனும் மரபுத் தொடரின் கருத்து
1.பல்லுக்கட்டுதல் 2.பல்லுக்கழற்றுதல் 3.இரந்து கேட்டல் 4.இருந்துகேட்டல்
21) "தலை முழுகுதல்" எனும் மரபுத் தொடரின் கருத்து
1.ஒரு காரியத்தை தலைமேல் கொண்டு செய்தல் 2.ஒரு காரியத்தை முற்றாக விட்டு விடுதல்
3.தலையில் தண்ணீர் ஊற்றிக் குளித்தல் 4.தலையில் தண்ணீர் ஊற்றாது குளித்தல்

பாடலை வாசிக்கவும்

**மாசை நீக்க மரக்கன்றை**
**மகிழ்ந்தே நட்டால் நலத்தருமாம்**
**வாசம் கொண்ட நன்மரங்கள்**
**வளர்ந்தே வேரால் நீர் பருகும்**

**22)பின்வரும் சொற்களுக்கு ஒத்த கருத்துச் சொல்லை பாடலிலிருந்து தெரிவு செய்து எழுதுக.**
1.மணம் - ............................. 2. புனல் - .............................
3.அழுக்கு - ............................. 4.சந்தோஷம்- .............................


23)



1. இவ் வடிவத்திலிருந்து பெறக்கூடிய ஆகக்கூடுதலான முக்கோணிகளின் எண்ணிக்கை எவ்வளவு? .............................
2.இவ் வடிவத்திலிருந்து பெறக்கூடிய ஆகக்கூடுதலான சதுரங்களின் எண்ணிக்கை யாது?.............................


24) வினாவில் தரப்படும் சொற்களை பயன்படுத்தி வாக்கியம் எழுதுக.
1.நாளிதழ் .............................................................
2.தலை சிறந்தது.............................................................
3.ஆயுள் காப்புறுதி.............................................................
4.நஷ்டஈடு.............................................................
5.தொன்மை.............................................................

25) இவ்வெண் கோலத்தை அவதானித்து சரியான விடையின் கீழ்க் கீறிடுக.




1.இவ்வெண் கோலத்தில்,முக்கோண எண்கள் மூன்று உள்ளன.
1.சரி 2.பிழை
2.இவ்வெண் கோலத்தில் அதிக தடவைகள் இரட்டை எண்கள் உள்ளன.
1.சரி 2.பிழை
3.இவ்வெண் கோலத்தில் மூன்று சதுர எண்கள் உள்ளன.
1.சரி 2.பிழை

***கீழுள்ள வரைபடங்களையும் அவற்றுக்கான விளக்கத்தினையும் அவதானிக்கவும்***





**மேலுள்ள வரைபடங்களையும் விளக்கத்தையும் கருத்தில் கொண்டு வினாவில் உள்ள விடயங்களுக்குப் பொருத்தமான வரைபடத்தைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கீறிடுக.**


26) வாகனங்கள், கார்கள், பஸ்கள்




27)மரங்கள் கிளைகள் கனிகள்




28) தென்னைமரம் தேங்காய் புளியமரம்




***மிகச் சரியான விடையின் கீழ்க் கீறிடுக***

29) புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாளில் நீங்கள் கட்டாயமாக பதிவு செய்ய வேண்டியது எது?
1.பாடசாலையின் பெயர் 2.ஆசிரியரின் பெயர் 3.உமது சுட்டெண்
4.நண்பரின் சுட்டெண்
30) வீதி விபத்தை தவிர்ப்பதற்காக வீதிகளில் இடப்பட்டுள்ளவை எவை?
1.தார் 2.மண் கல் 3.சமிக்ஞைகள் 4.வடிகால்
31.மருந்து ஒன்றைக் கடையில் வாங்கும் போது நீர் அவதானிக்க வேண்டியது எது?
1.விலை 2.பாவனைக்காலம் 3.மருந்தின் தரம் 4மருந்தின் சுவை
32) 1 தொடக்கம் 6 வரையுள்ள வினாக்கள் பின்வரும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டன. ஒவ்வொரு வினாவின் கீழும் தரப்படும் விடைகளில் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதனைக் குறித்து நிற்கும் விடையின் இலக்கத் தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

**A யிலும் B உயரங்கூடியவன் ஆனால் நிறை குறைந்தவன்**
**B யிலும் C உயரங்கூடியவன் அத்தோடு நிறையும் கூடியவன்**
**A யிலும் C உயரங்கூடியவன் ஆனால் நிறை குறைந்தவன்**

1.,இவர்களில் உயரக்கூடியவர் யார்?
1.A 2.B 3.C 4.கூறமுடியாது (.........................)
2. இவர்களில் உயரங் குறைந்தவர் யார்?
1.A 2.B 3.C 4.கூறமுடியாது (.........................)
3.இவர்களில் உயரங் குறைந்தவர் யார்?
1.A 2.B 3.C 4.கூறமுடியாது (.........................)
4.இவர்களில் நிறை குறைந்தவர் யார்?
1.A 2.B 3.C 4.கூறமுடியாது (.........................)
5.இவர்களில் உயரத்தில் நடுத்தரமானவர் யார்?
1.A 2.B 3.C 4.கூறமுடியாது (.........................)
6. இவர்களில் நிறையில் நடுத்தரமானவர் யார்?
1.A 2.B 3.C 4.கூறமுடியாது (.........................)

(05ஆம் பக்கம் பார்க்க...)

மூடனுடன் விவாதம் செய்வது அறிவுடைமையன்று; பக்கத்தில் நிற்பவர்களுக்கு யார் மூடன் என்று புரியாமல் போய்விடும்.

–லிஃஃப்டிங்

வலம்புரி

## இக்கட்டான சூழ்நிலைக்குள் இலங்கை அரசு அகப்பட்டுள்ளது

இனப்பிரச்சினைக்கான தீர்வு, யுத்தம் என்ற அரசின் முடிவு சர்வதேச மட்டத்தில் பெரும் குழப்பத்தையும், எதிர்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு பேச்சுவார்த்தையினூடாக, சமாதான வழியில் எட்டப்பட வேண்டுமென்பதே சர்வதேசத்தின் தீர்மானமாக இருந்தது.

ஆனால் தற்போதைய அரசு சர்வதேசத்திற்கு இம்மியும் மதிப்புக் கொடுக்காமல் எழுந்தமானமாக யுத்தம் நடத்தப்படுமென்ற அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

அரசின் இந்த அறிவிப்பும், டினித உரிமை மீறல் சம்பவங்களும் இலங்கை அரசு மீது சர்வதேசத்திற்கு கடும் கோபத்தையும், ஆத்திரத்தையும் தோற்றுவித்துள்ளது.

இவற்றின் விளைவாக இலங்கைக்கான உதவித்திட்டங்கள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்து போகும் நிலை விரைவில் ஏற்படும் அபாயம் உண்டு.

சர்வதேச சமூகத்தின் ஆலோசனைகள், அபிப்பிராயங்களை உதாசீனம் செய்தமை மற்றும் ஐ.நா சபையின் மனித உரிமை கண்காணிப்பு ஆணைக்குழுவை இலங்கையில் நிறுவ மறுத்தமை போன்ற காரணங்களால் இலங்கை அரசு பாரியதொரு சிக்கலை எதிர்நோக்கவுள்ளதென்பது நிறுத்திட்டமான உண்மை.

அதேவேளை யுத்தத்திற்காக அரசு மேற்கொள்ளும் செலவு உள்நாட்டில் பெரும் பணவீக்க நிலையை தோற்றுவித்துள்ளது.

இதனால் தினசரி பொருட்களின் விலைகள் ஏற்றம் காணுகின்றன.

விலை ஏற்றத்திற்கு அமைச்சர்கள் கூறும் காரணம் மக்களின் சினத்தை மேலும் வலிமைப்படுத்தும் போல் தெரிகிறது.

நாட்டின் பாதுகாப்பை நிலைநிறுத்தவேண்டுமெனில், பொருட்களின் விலை அதிகரிப்பை ஏற்றுத்தான் ஆகவேண்டுமென மூத்த அமைச்சர் ஒருவர் குறிப்பிட்டிருந்தார். பெறுமதியான காரில் சௌகரியமாக பயணம் செய்யும் அமைச்சர் ஒருவர் மேற்க்ண்டவாறு கூறலாம்.

ஆனால் மக்களின் வாழ்க்கைச்சுமை, வேலையின்மை போன்ற பாதகமான சூழமைவில், விலையேற்றத்தை தாங்கிக் கொள்வதென்பது சர்தாரண மக்களால் முடியாத காரியம்.

இத்தகைய வாழ்க்கை சுமையின் எதிரொலியாக அரசபணியாளர்கள் திடீரென பணிநிறுத்தப் போராட்டங்களில் குதித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எனவே உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இலங்கை அரசுக்கு ஏற்பட்டுள்ள பாதகமான தாழமுக்கத்தை ஓரளவேனும் கலைக்க அரசு முற்படுவதாயின் உடனடியாக யுத்த நிறுத்தத்தை அமுல்படுத்தி சமாதான முயற்சியை முன்னெடுப்பதே ஒரே வழியாகும்.

# ஊடக ஒடுக்கு முறை தொடர்பாக அரசியல்வாதிகளுடன் கலந்துரையாடல்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெறும் ஊடக ஒடுக்குமுறைகள்தொடர்பாகஊடக அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் இடையில் இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை சந்திப்பொன்று இடம் பெற்றது.

மிகவும் மோசமடைந்து செல்லும் ஊடக நிலைமை குறித்தும் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் இச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது என சுதந்திர ஊடக இயக்கத்தின் ஏற்பாட்பாளர் உவிந்து குருகுலசூரிய தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களின் உரிமைகள் மற்றும் அவர்களைப் பாதுகாப்பது குறித்தும் ஊடகவியலாளர் ஜே.எஸ்.திஸநாயகத்தின் விடுதலை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன. ரூபவாஹினி பணியாளர்களுக்கு எதிராக செயற்பட்ட அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் பணியாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டமை மற்றும் பாதுகாப்பு அமைச்சு ஊடகவியலாளர்கள் தேசத்துரோகிகள் என வர்ணித்துள்ளமை குறித்து இங்கு கலந்துரையாடியிருந்தோம் என உவிந்து குருகுல சூரிய குறிப்பிட்டார்.

எனினும் இலங்கையில் ஊடக அடக்குமுறை இல்லையென சந்திப்பில் கலந்துகொண்ட அமைச்சர்களான ராஜித சேனாரட்ன மற்றும் டலஸ் அளகப்பெரும ஆகியோர் கூறியிருந்தனர். ஆனாலும் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டிருக்கும் அமைச்சரவை குழு இன்று கூடி ஆராயும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத் தரப்பில் அமைச்சர்களான டலஸ் அளகப்பெரும, ராஜித சேனாரட்ன, ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க, தயாசிறி ஜெயசேகர, மேலக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன், ஜாதிகஹெல உறுமயவின் தயாரட்ணதேரர், புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்ரமபாகு கருணாரட்ன, லங்கா சமசமாஜக் கட்சி, மலையக மக்கள் முன்னணி உள்ளிட்ட முக்கிய கட்சிகளின் பிரதிநிதிகள் உட்பட ஊடக அமைப்புக்களின் பிரதிநிதிகளும் இச் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர். (அ)

# அரச சேவைகள் ஆணைக்குழு மூலம் 8 ஆயிரம் பேருக்கு அதிபர் நியமனம்

## கல்வி அமைச்சின் உயர் அதிகாரி தகவல்

(கொழும்பு)

பாடசாலை அதிபர் பதவிகளுக்கு தகுதியானவர்களைத் தேர்ந்தெடுக்கும் நோக்கில் மாகாண கல்வித்திணைக் களங்களினூடாக நடத்தப்பட்டு வரும் நேர்முகப் பரீட்சைகள் முடிவுற்றதும் அரச சேவைகள் ஆணைக்குழு ஊடாக அதிபர் பதவிகளுக்கான நியமனங்களை வழங்கவுள்ளதாக கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய பெரும்பாலான மாகாணங்களிலிருந்த நேர்முகப் பரீட்சையில் விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொண்ட புள்ளி விபரங்கள் அனுப்பப்பட்டுள்ளன. மேல் மாகாணத்திலும் நேர்முகப் பரீட்சைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பரீட்சைத்திணைக்களத்தினால் நடத்தப்பட்ட எழுத்துப் பரீட்சைகளிலும் நேர்முகப் பரீட்சைகளிலும் சேர்த்துகூடுதலான புள்ளிகளைப் பெற்றவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படவிருக்கின்றன. இந் நியமனத்தில் எவருக்கும் அநீதி இழைக்கப்படக்கூடாது என்பதே கல்வியமைச்சின் நிலைப்பாடாகும்.

அதிபர் தரம் ii பதவிக்காக 21878 பேரும் தரம் iii பதவிக்கு 19116 பேரும் விண்ணப்பித்துள்ளனர். இவர்களில் 8ஆயிரம் பேருக்கு அதிபர் நியமனங்கள் வழங் கப் பட வுள்ளன. 2001 ஆம் ஆண்டின் பின் நீண்ட காலமாக அதிபர் பதவிக்காக புதியவர்கள் இணைத்துக் கொள்ளப் படாதமையினால் ஏற்பட்ட அதிபர் வெற்றிடங்ளுக்கு பாடசாலைகளிலிருந்து சிரேஷ்ட ஆசிரியர்கள் பதில் அதிபர்களாக நியமிக்கப்பட்டனர். இவர்கள் பதில் கடமையாற்றிய காலத்தை அடிப்படையாகக் கொண்டு அதிபர் தரம் ii, iii தரங்கள் பெற்றுக் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் உயர் அதிகாரி மேலும் தெரிவித்தார். (அ)

# சேவையாப்புகளில் திருத்தம் செய்யப்படாமையால் அரச ஊழியர்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது

## ஏழு தொழிற்சங்கங்கள் கூட்டாக அறிக்கை

(கொழும்பு)

அரசாங்கச் சம்பள ஆணைக் குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய அனைத்துச் சேவைகளினதும் யாப்புக்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப் படாமையினால் சகல அரசாங்க ஊழியர்களுக்கும் அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக 7 அரசாங்கத் தொழிற்சங்கங்கள் கூட்டாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளன.

அரச சேவை பொறியியலாளர் சங்கம், இலங்கை திட்டமிடல் சேவை சங்கம், கால்நடை வைத்தியர் சங்கம், அரசாங்க விஞ்ஞான தொழிற்சங்கம், இலங்கை கணக்காய்வாளர் சங்கம், விவசாய பட்டதாரிகள் சங்கம், கல்வி நிர்வாக சேவை சங்கம் ஆகிய 7 சங்கங்கள் கூட்டாக இணைந்து இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளன. அரசாங்க சம்பள ஆணைக் குழுவினால் வெளியிடப்பட்ட 06-2006 சுற்று நிருபத்தின் அடிப்படையில் அரசாங்கச் சேவையின் அனைத்து யாப்புக்களிலும் திருத் தங்கள் மேற்கொள்ளப் படவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இந்தச் சுற்று நிருபம் வெளியிடப்பட்டு இரண்டு ஆண்டுகள் கழிந்துள்ள போதிலும் இதுவரையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் இதனால் நாடு தழுவிய ரீதியில் உள்ள அனைத்து அரச ஊழியர்களும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

# வெள்ளி நற்சிந்தனை 25

## பக்தியின் மொழி தமிழ்

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என ஒரு முதுமொழி உண்டு. மக்கள் குடியிருக்கும் இடத்திலே ஒரு கோவில் இருக்கவேண்டும். அதுவே ஊர்மக்கள் ஒன்று கூடும் பொது இடமாகும். குடும்ப நிலையில் ஒன்றாக வாழும் வாழ்க்கைக்கு மேற்பட்டதாகப் பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து மகிழ்வாய் வாழ்வதற்கு கோயில் பெரிதும் உதவுகின்றது. கோயிலின் அமைப்பும் சூழலும் மக்களின் மனங்களை ஈர்க்கும் தன்மையுடையவை.

சமயவாழ்க்கை பற்றிய அறிவையும் ஞானத்தையும் நாம் பெறுவதற்குக் கோயில்களே சிறந்த பயிற்சிக் கூடங்களாக விளங்குகின்றன. இளவயதுடைய சம்பந்தர் கோயில்கள் பலவற்றைச் சென்று தரிசித்தவர். கோவிலைச் சுற்றி வழிபாடு செய்கையில் பத்துப்பாடல்களைப் பாடி வழிபட்டவர் அவரது வழிபாடு இறைவன் மீது கொண்ட அன்போடு ஓர் இயற்கையழகை ரசிக்கும் தன்மையும் கொண்டிருந்தது. சுற்றுச் சூழலைக் கூர்ந்து கவனித்துச் சொற் சித்திரங்களாகப் பாட்ல்களை அமைத்துள்ளார்.

உயர்ந்த வானை முட்டுகின்ற போபுரங்களைக் கண்டு அவர் வியப்படைகின்றார். கோலங்கள் நிறைந்த பெரிய மாளிகை போன்ற கட்டட அமைப்பு அவர் கண்ணைக் கவர்கிறது. சூழவுள்ள கண்டல் மரங்களும் கைதை மரங்களும் நிரையாக வளர்ந்திருக்கும் காட்சி இயற்கையின் ஒழுங்கமைப்பைக் கூறி நிற்கிறது. அவற்றை வேலியாக்கி உள்ளே நிற்கும் வாவியில் தாமஙீர மலர்கள் அழகாக மலந்திருக்கின்றன. வாவியின் அருகே வண்டுகள் உலாவுகின்ற பூம்பொழில் அணி செய்து நிற்கிறது. இத்தகைய அழகான சூழலில் திருமயேந்திரப்பள்ளி என்னும் தலம் அமைந்துள்ளது. அங்கு வீற்றிருக்கின்ற சிவன் விடையில் அமர்ந்திருக்கும் காட்சி அவர் மனதைப் பெரிதும் கவர்ந்தது. அங்குள்ள இறைவனின் திருவடியை எல்லோரையும் பணிந்து வணங்கும் படி பாடலில் அழைப்பு விடுத்துள்ளார்.

கோவிற் சூழலின் கவர்ச்சியால் உந்தப்பட்டு மக்கள் அங்கு சென்று வழிபட விரும்புவர் எனச் சம்பந்தர் கருதியதில் தவறில்லை. குறிப்பாக இளம் உள்ளங்கள் அழகான இடங்களைச் சென்று பார்வையிட விரும்புவது இயல்பே. சம்பந்தருடைய இளஉள்ளமும் அதனையே விரும்பி நின்றதை அவருடைய பாடல்கள் நன்கு உணர்த்துகின்றன. இறைவனைக் கண்டு வணங்குவதற்கு முன்னர் அவன் உறைகின்ற சூழலின் அழகுக்காட்சியைக்கான மக்களை அழைக்கின்றார். நீர்வளமும் நில வளமும் கொண்ட பிரதேசத்தில் கோயில் அமைந்தால் அங்கு குடியிருப்பும் நிலைபெற்றிருக்கும்.

"கொண்டல் சேர் கோபுரம் கோல
மார் மாளிகை
கண்டலுங் கைதையுங் கமலமார்
வாவியும்
வண்டுலாம் பொழிலனி
மயேந்திரப் பள்ளியிற்
செண்டுசேர் விடையினான்
திருந்தடி பணிமினே"

# தமிழர் தாயகப்பகுதிகள் முழுவதிலும் புலிகளின் நடவடிக்கை தீவிரமடையும்

## புலிகளின் இராணுவப்பேச்சாளர் தெரிவிப்பு

யாழ். மற்றும் கிழக்குப்போன்று தமிழர் தாயகப்பகுதிகளை முழுவதிலும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் இனி தீவிரமடையும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவப்பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்துள்ளார். அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்பு கூட்டுத்தபான வானொலிக்கு செவ்வாய்க்கிழமை அவர் அளித்த நேர்காணலிலேயே இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

*கேள்வி:-மணலாற்றில் கடந்த வாரம் முதல் பாரிய படை நடவடிக்கை ஒன்றினை ஸ்ரீலங்கா படையினர் ஆரம்பித்து அதில் அவர்கள் முன்னேற்றம் கண்டுள்ளனர். என்று கூறப்படுகின்றது. அங்குள்ள உண்மை நிலவரம் என்ன?*

பதில்:-படையினர் கூறுவதனைப் போன்று மணலாற்றில் பாரிய அளவிலான ஒரு முன்னேற்றமோ அல்லது பாய்ச்சல் நடவடிக்கையோ அங்கு இடம்பெறவில்லை. கடுமையான மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. அந்தப் பகுதியில் இடம் பெறும் நடவடிக்கைகள் பல மாதங்களாக இழு பட்டுவருகின்றன என்பது தான் உண்மை.

*கேள்வி:61ஆவது படையணி களமிறக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. இந்தப்படையணியின் தாக்குதல்களில் புதிதாக ஏதாவது உத்திகள் தென்படுகின்றனவா?*

பதில்:- அண்மைக்காலமாக அவர்கள் அமைத்துவருகின்ற விகிதத்திற்கு குறைவான அணிகளில் ஒன்றாகவே 61ஆவது படையணியும் உள்ளது. மற்றும் படி அந்தப் படையணியில் எதுவித வித்தியாசத்தையும் இதுவரை நாம் களமுனையில் காணவில்லை. வழக்கமாக ஒரு டிவிசன் என்றால் அதில் அமைய வேண்டிய ஆட்தொகை, அதில் உள்ள பற்றாலியன்களுக்கான ஆட்தொகை, கொம்பனிகளுக்கான ஆட்தொகை, பிரிக்கெற்றுகளுக்கான ஆட்தொகை என்றெல்லாம் இருக்கின்றது. அவ்வாறான விகிதங்களை கைவிட்டு சிறிய சிறிய அணிகளுக்குப் பெரிய பெரிய பெயர்களைச்சூட்டியே களத்தில் இறக்குகின்றனர். இது அவர்களின் படைத்துறை தேவையா? அல்லது அரசியல் தேவையா என்பது எமக்கு தெரியவில்லை என்றார்.

*கேள்வி:- மன்னார் கள முனையில் மதவாச்சி, அடம்பன் பெரியமடு மடுப்பகுதிகளில் சுமார் 26 கிலோ மீற்றர் தூரம் வரை முன்னேறி இருப்பதாக ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கூறுகின்றனர். மன்னார் கள முனையின் பிந்திய நிலவரம் என்ன?*

பதில்:-மன்னாரில் படை நடவடிக்கைகள் இடம்பெறுகின்ற இடங்களின் பரப்பளவுகள் குறித்த தகவல்களை வெளியிடுவதில் படைத்தரப்பு ஆரம்பம் முதலே ஆர்வம் காட்டி வருகிறது. ஒரு அரசாங்கத்தின் படைகள் ஏனைய நாடுகளின் ஆதரவு பெற்றுள்ள படைகள் பெரும்பாலும் உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தியே போரிடும் உள்ளூர் விடுதலை அமைப்பிடம் ஒரு கயிறு இழுத்தல் போட்டியில் பங்கு பற்றுவதனைப் போன்று முன்னே செல்வதனையும் பின்னே வருவதனையும் கணக்கிடுவதானது ஒரு நகைப்புக்கிடமான செயற்பாடாகவே கருதப்படுகின்றது.

அவ்வளவு சக்தி, அவ்வளவு வலிமை அவ்வளவு ஆதரவு பெற்ற படைகளால் இன்னும் ஏன் முழுமையாக கைப்பற்ற முடியவில்லை என்ற கேள்விக்கு அவர்களிடம் பதில் இல்லை. அந்தப்பகுதிகளை கைப்பற்ற விடாதளவுக்கு எமது பலம் இருக்கின்றது. எமது பலத்தைத்தான் இப்போது இடம்பெறுகின்ற சண்டைகள் நிரூபித்து வருகின்றன என்றார்.

*கேள்வி:- வட போர் அரங்கில் நாகர் கோயில் முதல் முகமாலையூடான கிளாலி வரையான முன்னரங்க நிலைகளின் பிந்திய நிலவரம் எப்படி உள்ளது?*

பதில்:-2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் இருந்தே இப்படியான முயற்சிகளில் அவர்கள் செய்து கொண்டு இருக்கின்றனர்.



அவர்கள் தங்களால் இயன்ற அனைத்து யுத்திகளையும் பயன்படுத்திவிட்டார்கள். அனைத்து ஆயுதங்களையும் பயன்படுத்திவிட்டார்கள். உச்சக் கட்ட வலிமையையும்பயன்படுத்திவிட்டார்கள். உச்ச நிலை தளபதிகள் கூட வந்து நின்று குறிப்பாக சரத் பொன்சேகா கூட வந்துநின்று போரிட்டுப் பார்த்தார். ஆனாலும் ஒரு அங்குலத்தைக் கூட இதுவரை அவர்களால் எமது போராளிகளிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியவில்லை.

இதே நிலைமைதான் இப்போதும் தொடர்கின்றது. அண்மைக்காலத்தில் சிறிய தாக்குதல்கள், பெரிய தாக்குதல்கள் என பல வகையான தாக்குதல்களைச் செய்து அந்த முயற்சிகள் தோற்று விட்ட நிலையில் மீண்டும் ஒரு படையெடுப்பிற்கான ஆயத்தங்களை அவர்கள் செய்துகொண்டிருக்கின்ற போதும் அத்தகையதொரு படை நடவடிக்கையை மேற்கொள்ள முடியுமா என்ற சந்தேகத்திலும் அவர்கள் தற்போது திணறுவதாக தெரிகின்றது என்றார்.

*கேள்வி:-கிழக்கில் இப்போது புலிகள் இல்லை குடாநாடு முழுமையான இராணுவக்கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. வன்னியில் நான்கு முனைகளிலும் போர் தீவிரம் பெற்றுள்ளது. அப்படியானால் படை வலு சமநிலை மாற்றமடைந்து விட்டது எனக்கூறலாமா?*

பதில்:- ஆரம்ப காலத்தில் சமச்சீர் அற்ற ஒரு சமநிலையைத் தான் படையினருடன் பேணக்கூடியதொரு நிலை இருந்தது. ஆனால் மரபுக் களங்களில் மிக நேர்த்தியான சமச்சீருடைய வலுச்சம நிலை நிலவுகின்றது. அண்மைக்காலமாக இடம்பெறும் சம்பவங்கள் படைவலு சமநிலையிலேயே நிச்சயமாக ஒரு மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியதாகவே இருப்பதனை அவதானிக்கலாம்.

தரைப்பிரதேசங்களை தக்க வைப்பதற்கு படையினர் ஆர்வம் காட்டுவதோடு ஏற்கனவே அவர்களின் கட்டுப் பாட்டுப்பகுதியில் இருக்கின்ற தாயகப் பகுதிகள் மற்றும் ஸ்ரீலங்காவின் பகுதிகள் அதிகளவான படைகளை நிறுத்த வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டுவருகின்றன.

அதேவேளையில் களமுனையில் அவர்களுக்கு முன்னர் கிடைத்திருக்கக்கூடிய சில சாதக நிலைகளை இழந்து மந்தச்செறிவை அவர்கள் அனுபவித்து வருகின்றனர். ஆட்செறிவை அவர்கள் கூட்டியபோதும் அந்த மந்த செறிவில் இருந்து அவர்களால் மீள முடியவில்லை. இன்னும் ஆண்டுக்கணக்கில் நடவடிக்கைகள் இழுபடுவதற்கான சாத்தியக் கூறுகளை கொழும்பில் உள்ள ஆய்வாளர்களே தெட்டத்தெளிவாகக் கூறியிருக்கின்றனர். அதே நேரம் இலங்கை கடற்படை அண்மைக்காலமாக கடலில் பரவலாக பலத்த இழப்புகளை சந்தித்து வருகின்றது. வலுச்சமநிலையில் சலனத்தை ஏற்படுத்தக்கூடிய இவ்வகையான சம்பவங்கள் தற்போது இடம்பெற்று வருகின்றன. அது எவ்வகையான மாற்றங்களை கொண்டுவந்து இருக்கிறது என்பதனை இப்போதைக்கு கணித்துச்சொல்ல முடியாது என்றார்.

*கேள்வி:- கிழக்கிலும் யாழ்ப்பாணத்திலும் அண்மைக்காலமாக புலிகளின் நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதாக கூறப்படுவது குறித்து?*

பதில்:-அவ்வாறானதொரு தோற்றம் அண்மையில் காணப்பட்டிருப்பது உண்மைதான் அங்கு மட்டுமல்ல தமிழர் தாயகம் முழுவதும் எமது நடவடிக்கைகள் இனி மேல் விரிவாக்கம் பெற்று தீவிரமடையும். அதற்கான ஓர் ஆரம்ப நிலைகள் தான் இவையாகும். (ச-5)

# இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களுக்கு கனேடிய அரசின் செயல் ஊக்கமளிக்கின்றது

## உலகத்தமிழர் அமைப்பு கவலை

(கொழும்பு)

இலங்கையில் அப்பாவித் தமிழ் மக்களுக்கெதிராக இலங்கை அரசு மேற்கொண்டுவரும் மிக மோசமான மனித உரிமை மீறல்கள் பற்றி சிறிதும் கவனத்திற்கொள்ளாது அங்கு பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களுக்கு உதவி வரும் உலகத் தமிழர் அமைப்பை தடை செய்ததானது இலங்கை அரசின் செயல்களுக்குப் பெரிதும் ஊக்கமளிப்பதாகவுள்ளதாக உலகத்தமிழர் அமைப்பு கவலை தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளுக்கு நிதி திரட்டுவதாகக் கூறி கனேடிய அரசு உலகத் தமிழர் அமைப்பைத் தடை செய்தது தொடர்பாக அந்த அமைப்பின் தலைவர் சின்னத்தம்பி சிற்றம்பலம் கூறுகையில்,

கனேடிய அரசின் இந்த முடிபு மிகவும் தவறானது என்ன அடிப்படையில் என்ன காரணங்களைக்கொண்டு அவர்கள் இந்த முடிவை எடுத்தார்களோ அதனை நாம் முற்றாக மறுக்கிறோம்.

அது மட்டுமல்ல இதற்கெதிராக தேவையான சட்ட நடவடிக்கைகளை கனேடியச் சட்டத்தின் கீழ் எடுக்கவுள்ளோம் அதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகின்றோம்.

இலங்கையில் இன்று தமிழ் மக்களுக்கெதிராக நடைபெறும் அநியாயங்கள் ஒன்று இரண்டல்ல. பலவிதமான இன்னல்கள் நடைபெறுகின்றன. இலங்கை அரசு மனிதாபிமானங்களையெல்லாம் முற்றாக மீறிச் செயற்படுகிறது. மனித உரிமைகள் மறுக்கப்படுகின்றன. அரசுக்கெதிராக எந்தவிதமான அபிப்பிராயத்தையும் தெரிவிக்க முடியவில்லை.

அப்படி எவராவது தெரிவித்தால் ஒன்றில் அவர்கள் முடக்கப்படுகிறார்கள் அல்லது அவர்கள் உயிரிழக்க வேண்டிய நிலையேற்படுகிறது. இதைவிட எமது மக்களுக்கு பலவிதமான இன்னல்கள் ஏற்படுகின்றன. விமானக்குண்டு வீச்சு மூலம் அவர்கள் அழிக்கப்படுகின்றனர். இதைவிட எவ்வளவோ அநியாயங்களெல்லாம் நடைபெறுகின்றன.

இவ்வாறான கொடுமைகளையெல்லாம் செய்யும் இலங்கை அரசுக்கு இந்த நேரத்தில் கனேடிய அரசு செய்த இந்த நடவடிக்கை பேருதவியாக இருப்பதுடன் அந்தச் செயல்களை மேலும் ஊக்குவிப்பதாக அமையுமென்பது எமது கவலை.

கனேடிய அரசு செய்யமுடியாது செய்யக்கூடாதென்பதை நாம் இங்கு வலியுறுத்திக் கூறுகின்றோம்.

எமது அமைப்பு கனேடிய தமிழ் மக்களிற்கு பலவிதமான தேவைகளையும் செய்கின்றது. முக்கியமாக அகதிகளாக வந்து தங்களது அனைத்து சொத்துகளை, சௌகரியங்களை இழந்துவந்து இங்கு தங்களை ஓரளவுக்கு காலூன்ற முயல்வோருக்குத் தேவையான உதவிகளை மிக நீண்ட காலமாகச் செய்துவருகின்றோம்.

எமது தாயகத்தின் விடுதலைக்காக எந்த அரசுடனுமோ அல்லது மற்றைய அமைப்புகளுடனோ இணைந்து அதற்கு ஆதரவு தேடுவது போன்றவற்றையே செய்கின்றோம்.

புலிகளுக்கு நாம்எதுவித உதவிகளையும் செய்யவில்லை அங்குள்ள எமது மக்களின் மனிதாபிமான தேவைகளுக்கே உதவுகிறோமே தவிர எவ்வித வன் முறைகளுக்கும் உதவுவதில்லை எனவும் தெரிவித்தார். (அ)

### வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

**நேற்றைய தொடர்ச்சி**

ஆடாதோடை மனப்பாகு

நறுக்கிய ஆடாதோடை இலைகள் மூழ்குமளவு நீர் விட்டு காய்ச்சி 1/4 பங்காக நீர் சுண்டியதும் இறக்கிக் கசக்கிப் பிழிந்த கசாயத்தை எடுத்து இதனுடன்காய்ச்சி வடிகட்டி சர்க்கரை அல்லது சீனி சேர்த்து, பாகுபதம் வரும் வரை காய்ச்சி இறக்கி விட வேண்டும். மூடி போட்ட கண்ணாடி புட்டியில் அடைத்து வைத்துக் கொள்ளவும்.

குழந்தைகள் முதல் பெரியோர் வரை 1 முதல் 4 தேக்கரண்டி வரை 3 முதல் 4 வேளை ஒரு நாளைக்கு பருகலாம்.

குழந்தைக்கு ஏற்படும் மந்தத் திற்கு 1/2 தேக்கரண்டி கொடுக் கலாம்.

ஆடாதோடை இலையை நிழலில் உலர்த்திய பொடியை ஊமத்தன் இலையில் சுருட்டி புகை பிடிக்க மூச்சுக் கோளாறு தீரும், சளி வெளியேறும், ஆஸ்மா குறையும்.

ஆடாதோடையிலையில் கைப் பிடியளவில் பாதியும் ஆடாதோடை யின வேரில் அரைக் கைப்பிடிய ளவும் நைத்து ஒரு சட்டியில் போட்டு 1 1/2 டம்ளர் தண்ணீர் விட்டு 1 டம்ளர் அளவிற்கு சுண்டக்காய்ச்சி வடிகட்டி காலை வேளையில் மட்டும் பிரசவ காலத்திற்கு 1-2 வாரத்திற்கு முன்பிருந்து கொடுத்து வர பிரசவத்தை இலகுவாக்கும்.

1. பங்கு இலைக்கு 8பங்கு நீர் விட்டு 1/8 ஆக குறுக்கி வடிகட்டிய குடிநீரை சீலையில் தோய்த்து ஒற்றமிட வீக்கம் மூட்டுகளில் ஏற்படும் பிடிப்பு தீரும்.

இதன் பூவை வதக்கி இரு கண்களின் மீதும் சுற்றிப்பூச கண்கரிப்பு, கண்நோய் குணமாகும். ஆடாதோடை வேர்,பட்டை, இலை அரைத்து புண்களுக்கு பூசலாம் அல்லது இவற்றையே குடிநீரிட்டு 30 மி.லீ அளவு காலை, மாலை புண்கள் ஆற உட் பிரயோகமாக கொடுக்கவும்.

1. பாவட்டங்காயை சுண்டங் காயை வற்றலிடுவது போல பாதியாக வெட்டி உலர்த்தி வற்றல் போட்டு கறி சமைத்து உண்ண பசியின்மையும் காய்ச்சலின் பின்பு ஏற் படும் உடம்பு வலியும் தீரும்.

2. பாவட்டம் இலையை சிறிது சிறிதாக அரிந்து பொட்டணியாக கட்டி ஆவியில் அவித்து வலியுள்ள மூட்டுக்களுக்கு தைலம் பூசிய பின்பு ஒற்றடம் இட வலிதணியும்.

3. பிரசவித்த தாய்மார்களுக்கு குளியலுக்கு பாவட்டம் இலைகளை முதல் நாள் இரவு நீரிடல் ஊறவிட்டு மறுநாள் கொதிப்பித்து தாங்கக் கூடிய சூட்டில் உருவி குளிக்க தாய்ப் பால் நன்கு சுரக்கும். உடலில் ஏற் படும் அசௌகரியங்களும் நீங்கும்.

பாவட்டம் இலையை வதக்கி வைத்து பற்றிட மூலத்தினாலுண்டாகும் வேதனை தணியும். பாவட்டம்வேரை குடிநீர் தயாரித்து கொடுக்க காய்ச்சலால் உண்டாகும் உடல் வலி தணிந்து வாயில் ஏற்படும் சுவையின்மையும் தீரும்.

# ஜே.வி.பி.ஓர் இனவாதக் கட்சி வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

(கொழும்பு)

ஜே.வி.பி ஓர் இன்வாத பாசிசவாத மற்றும் வன்முறையான கட்சி என ஜனநாயக இடது சாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

எனினும் ஜே.வி.பி.ஓர் இடது சாரி கட்சி என மக்கள் பிழையாக விளங்கிக் கொண்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

1947ஆம் ஆண்டு தொழிற்சங்கப் போராட்டத்தின் போது படுகொலை செய்யப்பட்ட கந்தசாமி நினைவு நிகழ்வுகளில் கலந்து கொண்ட போது அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொறுப்பை இடதுசாரி முன்னணி ஏற்றுக்கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பொருட்களின் விலையைக் குறைக்குமாறு குரல் கொடுத்த போதிலும் விலையைக் குறைக்கக்கூடிய எந்தவொரு காத்திரமான திட்டமும் ஐ.தே.க.வசம் இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# புலிகளுக்கு எதிரான பிரசாரத்தில் அரசு தோல்வியடைந்துவிட்டது

**தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான பிரசார நடவடிக்கைகளில் அரசாங்கம் தோல்வியடைந்து விட்டதாக மகிந்த ராஜபக்ஷ கூறியதன் பின்னணி குறித்து கொழும்பு ஆங்கில ஊடகமான டெய்லி மிரர் ஆய்வுக்கட்டுரையினை வெளியிட்டுள்ளது. அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளதன் முக்கிய பகுதிகளின் தமிழாக்கம் இங்கு தரப்படுகின்றது.**

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான பிரசார நடவடிக்கைகளில் தாம் தோல்வி அடைந்துள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 'த லண்டன் ரைம்ஸ்' பத்திரிகைக்கு அண்மையில் தெரிவித்துள்ளார்.

சர்வதேச சமூகத்தின் முன்பாக தமது அரசாங்கத்திற்கு உள்ள பாதகமான நிலையை விடுதலைப் புலிகள் சாதுரியமாக பயன் படுத்திக் கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புலிகளுக்கு எதிரான பிரசாரத்தில் அரசாங்கம் தோல்வி அடைந்துள்ளதென்று ஜனாதிபதி குறிப்பிடுவாராயின் அது அரசாங்கத்தின் சார்பில் பிரசாரத்தை முன்னெடுக்கும் அனைத்துத் தரப்பினரதும் இயலாமையை வெளிப்படுத்தி நிற்பதாகவே அர்த்தப்படும்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் சக்தி தொலைக்காட்சிக்கு அளித்த செவ்வி தொடர்பாக மகிந்த ராஜபக்ஷ கருத்து வெளியிட்டிருந்தார்.

இலங்கை அரசாங்கமானது மிக சாணக்கியமாக எமக்கு எதிரான பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றது. எமக்கு எதிரான சேறு பூசல்களிலும் குற்றச்சாட்டுக்களிலும் அதி அக்கறை காட்டி வருகின்றது.

அதனால் சர்வதேச ரீதியில் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கி வருகின்றோம் என்று ஜெனீவா சமாதானப் பேச்சுவார்த்தையின் பின்னர் சு.ப.தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டிருந்தார்.

அச்செவ்வி வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் போர் நிறுத்த உடன்படிக்கையை மீறி தமிழீழ விடுதலைப் புலிகள், படையினர் மீது கிளைமோர்க் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டனர்.

இவை அனைத்தையும் சமாதானத்துக்காக பொறுத்துக்கொள்வதாகவும் சமாதானத்தின் கதவுகள் திறந்தே காணப்படுவதாகவும் மகிந்த அரசாங்கம் தொடர்ந்து வலியுறுத்தி வந்தது.

மகிந்தவின் அந்தப் பொறுமையை சர்வதேச சமூகம் வியந்து பாராட்டியதுடன் புலிகளின் செயற்பாடுகளை கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டன.

குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப்புலிகளை ஓர் தடைசெய்யப்பட்ட இயக்கமாக அறிவித்தது. கன்டா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட சில நாடுகள் விடுதலைப் புலிகளை தடை செய்வது குறித்து ஆலோசனை நடத்தின.

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுதக் கொள்வனவை சுற்றிவளைக்க அமெரிக்காவின் புலனாய்வு நிறுவனம் நடவடிக்கை எடுத்தது.

மேலும் ஆழிப்பேரலை நிவாரணப் பணிகள் என்ற போர்வையில் விடுதலைப் புலிகளுக்கு நிதி சேகரிப்பதில் ஈடுபட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு எதிராக அமெரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் மட்டுமல்லாது கனடாவும் புலிகளின் செயற்பாடுகளுக்கு எதிராக கட்டுப்பாடுகளை விதிக்கத் தொடங்கியது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக சர்வதேச ரீதியில் எதிர்ப்பலை வலுப்பெறத் தொடங்கியது.

மகிந்த அரசாங்கமானது இன்னும் சற்றுப்பொறுமை காத்திருந்தால் தமிழீழ விடுதலைப்புலிகளை அழிக்கக் கூடிய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கக் கூடும். ஆனால் சேருவில, மாவிலாறு சர்ச்சையின் மூலம் விடுதலைப் புலிகள் அந்த எதிர்ப்பலையை இலாவகமாக திசை திருப்பிவிட்டனர்.

அரசாங்கப்படையினர் விடுதலைப் புலிகள் மீது மேற்கொண்ட தாக்குதல்களின் மூலம் இந்த கடினமான எதிர்ப்பலை திசை திருப்பப்பட்டதாகவே தென்படுகிறது. போர் நிறுத்த உடன்படிக்கை ஒருதலைப்பட்சமாக இரத்துச் செய்யப்பட்டதன் ஊடாக சமாதானத்துக்கான கதவு இறுக்கி மூடப்பட்டது.

போர் நிறுத்த உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டதன் மூலம் நோர்வே சமாதானத் தூதுவர்கள் வன்னிக்குச் செல்வது தடைப்பட்டது.

இதனால் விடுதலைப் புலிகளின்பால் காணப்பட்ட சர்வதேசத்தின் அதிருப்தி அலை மகிந்த அரசாங்கம் மீது திசை திரும்பியது.

மாவிலாறு சர்ச்சை மகிந்த அரசாங்கத்திற்கு எதிரான எதிர்ப்பலையின் திருப்பு முனையாக அமைந்திருந்தது.

எனினும் தமிழீழ விடுதலைப்புலிகளின் சாணக்கியமான பிரசாரப் பொறிமுறையே அரசாங்கத்திற்கு எதிராக சர்வதேச சமூகம் அதிருப்தி கொள்ள ஏதுவாக அமைந்துள்ளது என்று அரசாங்கம் குற்றம் சுமத்துகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தத்துவ ஆசிரியர் அன்ரன் பாலசிங்கம் தலைமையில் ஓர் வலுவான பிரசாரப் பொறிமுறையை விடுதலைப் புலிகள் பேணி வந்தனர்.

2005ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் தொடர்பான புலிகளின் நிலைப்பாடு மற்றும் போர் நிறுத்த மீறல்கள் ஆகியனவைதான் சர்வதேச சமூகத்தில் புலிகளுக்கு பாதகமான பின் புலத்தை ஏற்படுத்தியதெனக் கூறின் அது பிழையாகாது.

அரசாங்கத்தின் பிரசாரப் பொறிமுறையைக் காரணமாக கூறமுடியாது.

எனினும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான பிரசாரங்களின் காரணமாகவே சர்வதேச சமூகத்தின் எதிர்ப்பலை உருவானதாக தமிழ்ச்செல்வன் தெரிவித்திருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான அரசாங்கத்தின் பிரசாரப் பொறிமுறை நலிவடைந்துள்ளதாக மகிந்த பகிரங்கமாக ஒப்புக்கொண்டுள்ளார்.

மேலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் சாணக்கியமான பிரசார வலையமைப்பின் காரணமாகவே அர்சாங்கத்திற்கு எதிரான அதிருப்தியலை வலுப்பெற்றுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புலிகளின் வலுவான பிரசார வலையமைப்பினைவிட மகிந்த அரசாங்கத்தின் இயலாமையும் தூர நோக்கற்ற திட்டங்களுமே பிரதான ஏதுக்கள் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## புதிய சிக்கலில் சிறிசாந்த்



(மும்பை)

பெங்களூர் ஹோட்டலில் தகராறு செய்த விவகாரத்தில் இந்திய வீரர் சிறிசாந்த் மற்றும் ஹோட்டல் நிர்வாகத்தினரிடம் விளக்கம் கேட்டு இந்திய கிரிக்கெட் சபை கடிதம் அனுப்பியுள்ளது.

இதையடுத்து சிறிசாந்த்துக்கு புதிய சிக்கல் எழுந்துள்ளது.

இந்திய வேகப்பந்து வீச்சாளர் சிறிசாந்த் அடிக்கடி சர்ச்சைகளில் சிக்கிக் கொள்வார். எதிரணி வீரர்களிடம் அளவுக்கு அதிகமாக ஆக்ரோஷம் காட்டும் இவர் சமீபத்தில் நடந்த ஐ.பி.எல் தொடரில் ஹர்பஜனிடம் அடிவாங்கினார். இதனையடுத்து ஹர்பஜனுக்கு தடை விதித்த இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ) இவரை கடுமையாக எச்சரித்து அனுப்பியது.

இந்நிலையில் காயம் காரணமாக பங்களாதேஷில் நடந்த முத்தரப்பு தொடரில் இருந்து விலகிக் கொண்டார். தற்போது பெங்களூரில் உள்ள தேசிய கிரிக்கெட் அக்கடமியில் காயத்தில் இருந்து முழுமையாக குணமடைய தேவையான பயிற்சி மேற்கொண்டு வருகிறார்.

கடந்த 15ஆம் திகதி இவர் தங்கியிருந்த கிர்ரான் அசோகா ஹோட்டல் ஊழியர் மற்றும் நிர்வாகத்திடம் தகராறு செய்து சிறிசாந்த் புதிய சர்ச்சையில் சிக்கிக் கொண்டுள்ளார்.

(5)

## சுவீடனை வீழ்த்தி ரஷ்யா காலிறுதிக்கு முன்னேற்றம்

(வியன்னா)

யூரோ கோப்பை கால்பந்தாட்டத்தொடர் ஆஸ்திரியா, சுவிட்சர்லாந்து நாடுகளில் நடைபெற்று வருகிறது.

டி பிரிவில் நேற்று இரவு நடந்த ஆட்டத்தில் முன்னாள் சம்பியன் ரஷ்யா -சுவீடன் அணிகள் மோதின. இரு அணிகளுக்குமே இந்த ஆட்டம் முக்கியத்துவம் வாய்ந்தது.

இதில் ரஷ்யா 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

24-வது நிமிடத்தில் றோமன் பாவ்லுசென்கோவும், 50-வது நிமிடத்தில் ஆந்த்ரோ அர்ஸ்வினும் கோல் அடித்தனர்.

இந்த வெற்றி மூலம் ரஷ்யா 6 புள்ளிகளைப் பெற்று காலிறுதிக்கு தகுதி பெற்றது. சுவீடன் வெளியேற்றப்பட்டது.

இதே பிரிவில் நடந்த மற்றொரு ஆட்டத்தில் ஸ்பெயின் -கிரீஸ் அணிகள் மோதின.

ஸ்பெயின் ஏற்கனவே காலிறுதிக்கு தகுதி பெற்று விட்டதாலும் நடப்புச் சம்பியன் கிரீஸ் வெளியேற்றப்பட்டதாலும் இந்தப்போட்டியின் முடிவு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.

இதில் ஸ்பெயின் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஒரு கட்டத்தில் ஸ்பெயின் 0:1 என்ற கணக்கில் பின்தங்கியிருந்தது. பின்னர் 2 கோல் அடித்து வெற்றி பெற்றது.



ஸ்பெயின்அணியில் ரூபன், டேனியல் குயிஸ்சா ஆகியோரும், கிரீஸ் அணியில் ஆண்டிரியாஸ் சாரிடியாசும் கோல் அடித்தனர்.

இது ஸ்பெயின் பெற்ற 3-வது வெற்றியாகும். அந்த அணி 4:1 என்ற கணக்கில் ரஷ்யாவையும் 2:1 என்ற கணக்கில் சுவீடனையும் வென்றது.

9 புள்ளிகளைப் பெற்று ஸ்பெயின் டி பிரிவில் முதலிடத்தை பிடித்தது. ரஷ்யா 2-வது இடத்தைப்பிடித்தது. இந்த இரு அணிகளும் காலிறுதியில் நுழைந்தன. சுவீடன், கிரீஸ் அணிகள் வெளியேற்றப்பட்டன.

ஸ்பெயின் காலிறுதியில் சி பிரிவில் 2-வது இடத்தைப் பிடித்த உலக சம்பியனான இத்தாலியை எதிர்கொள்கிறது.

ரஷ்யா காலிறுதியில் சி பிரிவில் முதலிடத்தை பிடித்து நெதர்லாந்துடன் மோதுகிறது.

(5)

## படையினரிடமுள்ள ஆயுத...

பாரிகளிடம் கொள்வனவு செய்து வழங்கினர். ஆனால் இன்று அரசாங்கமே ஆயுதங்களை நேரடியாக ஆயுத வியாபாரிகளிடம் கொள்வனவு செய்கின்றது.

இதனால் தனியார் துறை ஆயுதத் தரகர்கள் அரசின் மீது விசனமுற்றுள்ளனர். அத்துடன் படையினரிடமுள்ள ஆயுத விபரங்கள் குறித்த தகவல்களை இந்த ஆயுதத் தரகர்கள் ஊடகங்களுக்கு வழங்குகின்றனர்.

ஆயுத வியாபாரத்தால் அதிக பணம் சம்பாதிக்கலாம் என்பதாலேயே அவர்கள் இப்படிச் செயற்படுகின்றனர். ஊடகங்கள் இந்தத் தகவல்களைப் பத்திரிகைகளில் கட்டுரையாக வெளியிடும்போது படையினரிடமுள்ள ஆயுதங்கள் குறித்த தகவல்கள் புலிகளுக்கு இலகுவாகச் சென்று விடும்.

இதனால் இது குறித்து ஊடக அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தி வருகின்றோம். அடுத்த சில நாள்களில் ஊடகங்களின் இந்தப் பிரச்சினைக்குரிய செயற்பாடுகளுக்குத் தீர்வு காணப்படும் என நம்புகின்றோம்.

இலங்கையில் ஊடக சுதந்திரம் இல்லை என்று கூறுவதனைவிட பிரித்தானியாவிலும் அமெரிக்காவிலும் ஊடக சுதந்திரம் இல்லை என்றே கூறுவதே பொருத்தமாகவிருக்கும். அங்கு எதற்கெடுத்தாலும் சட்டத்திற்குப் பதிலளிக்க வேண்டும்.

அங்குள்ள ஒருவர் 100 டொலர் பணத்தை வேறொரு நாட்டவருக்கு அனுப்ப வேண்டுமானால் அதற்குக் காரணம் கூற வேண்டும். இலங்கையில் அப்படியில்லை.

அதேபோன்று ஊடகங்கள் மீதும் அங்கு அடக்கு முறைகள் உள்ளன என்றார் அவர். (ச-5)

## யுத்த...

காட்டியுள்ளது.

ஊடகங்கள் அடக்கு முறைக்கு உட்படுத்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்படும்போது இவ்வாறான கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவது நகைப்புக்குரியன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊடகங்களில் பிரசுரிக்கக் கூடாதெனப் பாதுகாப்பு அமைச்சின் இணையத் தளத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் அனைத்து விடயங்களுக்காகவும் தமது அமைப்பு குரல் கொடுக்கவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசாங்கம் இந்தத் தடைகளை உடனடியாக வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-5)

# சி.டி.எம்.ஏ. செயற்படாத காலத்துக்கான வாடகைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது

## ரெலிக்கொம் முகாமையாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

தடைப்பட்டுப் போயுள்ள சிறிலங்கா ரெலிக்கொம்மின் சிற்றிலிங் சி.டி.எம்.ஏ. தொலைபேசி இணைப்புகளுக்கான மாதாந்த வாடகைக் கட்டணம், சேவை இடைநிறுத்தப்பட்ட காலத்துக்கு அறவிடப்படமாட்டாது என சிறிலங்கா ரெலிக்கொம்மின் வட பிராந்திய முகாமையாளர் எஸ்.சிவானந்தன் தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டில் வழங்கப்பட்ட 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சி.டி.எம்.ஏ. தொலைபேசி இணைப்புக்கள் கடந்த 7 ஆம் திகதி முதல் செயலிழந்துள்ளன.

அதன் பின்னர் அரச திணைக்களங்களுக்கு வழங்கப்பட்ட சி.டி.எம்.ஏ. தொலைபேசி இணைப்புக்கள் படிப்படியாகச் செயற்பட ஆரம்பித்துள்ளன.

தனியார் நிறுவனங்கள், தனிநபருக்கு வழங்கப்பட்ட சி.டி.எம்.ஏ. தொலைபேசி இணைப்புக்கள் தொடர்ந்தும் செயலிழந்த நிலையிலேயே காணப்படுகின்றன.

இந்நிலையில் அவர்களுக்கான சேவைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தொலைபேசி நிறுத்தப்பட்ட காலத்துக்கான வாடகைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது எனவும் வட பிராந்திய முகாமையாளர் எஸ்.சிவாணந்தன் தெரிவித்தார். (ச-5)

## 73 ஆயிரம் இலங். தமிழ்...

மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை அதிகாரிகள் மத்தியில் நேற்று உரையாற்றுகையிலேயே முதல்வர் கருணாநிதி இவ்வாறு தெரிவித்துள்ளார். இந்த மாநாட்டுக்கு முதலமைச்சர் கருணாநிதி தலைமை தாங்கி உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது,

கடந்த பல ஆண்டுகளாக இலங்கையில் நிலவி வரும் இனக் கலவரம் காரணமாகத் தமிழ்நாட்டுக்கு இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக வரும் நிலை தொடர்கின்றது.

31.05.2008 அன்றைய நிலைவரப்படி தமிழ்நாட்டிலுள்ள 117 இலங்கை அகதிகள் முகாம்களில் 73 ஆயிரத்து 433 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாகத் தங்கியுள்ளனர்.

அகதிகளாக வாழும் இலங்கைத் தமிழர்களில் சிலர் பல்வேறு ஆவணங்களை சட்டத்திற்கு எதிரான வழிகள் மூலம் பெற்று தமிழகத்தில் சொத்து வாங்குவதில் ஈடுபடுவதாகத் தகவல்கள் அரசின் கவனத்திற்கு வந்துள்ளன.

இவற்றைப் பரிசீலித்து இந்தியக் குடிமகனாக அல்லாதவர்கள் இவ்வுரிமைகளைப் பெற வழியில்லை என்பதை நீங்கள் உறுதி செய்திட வேண்டும் என்றார். (ச-5)

## உலக...

தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்றும் பெரும்பாலான அகதிகள் அயல் நாடுகளிலேயே அஞ்சமடைந்துள்ளதாகவும் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்கா, தென்னாபிரிக்கா, சுவீடன் என்பன புகலிடம் கோருபவர்களின் முக்கிய இலக்கு நாடுகளாகவுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. (ச-5)


# பணிநிலை வெற்றிடம்

* இயந்திர இயக்குனர் (முன் அனுபவம் உள்ள ஆண்கள்)
(Offset Machine Minder)
* புத்தகம் கட்டுனர் (முன் அனுபவம் உள்ள ஆண்கள், பெண்கள்)
(Book Binder)
* கணனி தட்டெழுத்தாளர், பக்க வடிவமைப்பாளர் (முன் அனுபவம் உள்ள ஆண்கள், பெண்கள்)
(Computer Typesetter & Designer)

18 வயதிற்கு மேற்பட்டிருத்தல் வேண்டும்

விண்ணப்பதாரிகள் 25.06.2008 ஆம் திகதிக்கு முன் காலை 11.00 மணி—மாலை 4.00 மணி வரை நேரில் சமூகம் தரவும்

கரிகணன் பிறிண்டேர்ஸ்,
இல:424, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.


## கட்டாரில்...

சிலாபம், புளத்சிங்கள, தம்புத்தேகம ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் காயமடைந்தவர்கள் ஹற்றன், கினிகத்தேன பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் அனைவரும் சிங்கள இனத்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த இலங்கையர்களின் சடலங்களை நாட்டுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தீ விபத்துத் தொடர்பான விசாரணைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இது தொடர்பான மரண விசாரணை, இரசாயனப் பகுப்பாய்வு மற்றும் பொலிஸ் அறிக்கைகள் கிடைத்தவுடனேயே சடலங்களை நாட்டுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த முடியுமெனவும் தொழிலாளர் அதிகாரி மேலும் தெரிவித்தார். (ச)

## இரண்டு பொலிஸார்...

கிளில் சென்று கொண்டிருந்த 2 பொலிஸாரே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் அக்கரைப்பற்று-கல்முனை வீதியில் நேற்றுக் காலை 8.45 மணியளவில் இடம்பெற்றது.

இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த துப்பாக்கிதாரிகளே துப்பாக்கிச் சூட்டை நடத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளர் ரஞ்சித் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிதாரிகள் மைக்ரோ பிஸ்டலைப் பயன்படுத்தியே துப்பாக்கிச் சூட்டினை நடத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த 2 மாதங்களுக்குள் அம்பாறை மற்றும் மட்டக்களப்பில் 9 பொலிஸார் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். (ச-5)

## மன்னாரில்...

துள்ளன.

ஊர்தியில் பயணித்த இருவரே இதில் படுகாயமடைந்துள்ளனர். படுகாயமடைந்தவர்களில் ஒருவரான ரெட்பானா விசுமடுவைச் சேர்ந்த பெரியசாமி ராஜா (வயது-36) என்பவர் முழங்காலில் முருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-5)

## யாழ்.சிறைச்...

சிறைச்சாலை வாகனம் மீதான தாக்குதல் குறித்த விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறை நீதிவான் கே. அரியநாயகம், சிறைச்சாலை வாகனம் நீதிமன்றத்திற்கு வரும்போது பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் எனவும் வட மாகாண பிரதிப் பொலிஸ் மாஅதிபருக்கு உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## விடுதலைப்புலிகளுடன் பேசத்...

பெரும்பாலான தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பு என்ற ரீதியில் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம் எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் முறிந்துபோன போர் நிறுத்த உடன்படிக்கையை மீண்டும் நடைமுறைப்படுத்துவது தொடர்பான கருத்தை அவர் நிராகரித்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தாம் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேசத் தயார் எனக் குறிப்பிட்டிருந்தமையையும் பசில் ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆயுதங்களைக் கீழே வைத்தால் மாத்திரமே தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தப்படும் என ஜனாதிபதி கூறியிருந்தமை தொடர்பில் அவரிடம் கேட்டபோது,

நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது நிபந்தனைகள் செயற்படுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழ்மக்களின் ஏகப் பிரதிநிதிகள் அல்லர். எனினும் பெரும்பாலான தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவர்கள் என்ற அடிப்படையில் அவர்களுடன் பேச முடியும். ஜனாதிபதியும் இதனையே முன்னர் வலியுறுத்தியிருந்தார்.


எனினும் துரதிஷ்டவசமாக அவர்கள் செய்கின்ற காரியங்களை ஏற்றுக் கொள்ள முடியதென பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கையில் சமாதான முன்னெடுப்புக்களுக்குத் தொடர்ந்தும் உதவி வழங்க நோர்வே அரசாங்கம் தயார் என அந்த நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் வெளியிட்டிருந்த அறிவிப்பை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

நோர்வே அரசாங்கத்தின் உதவி எங்களுக்குத் தேவையில்லை. புலிகளின் ஆயுதங்கள் களையப்படாது நோர்வே அதிகாரிகளை வன்னிக்கு அழைத்துத் தற்போது முன்னெடுக்கப்படும் யுத்த நடவடிக்கைகளைக் குழப்ப புலிகள் முயற்சிப்பதாக அரசாங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

நோர்வே அரசாங்கம் இந்த அறிவிப்பை விடுப்பதற்கு முன்னர் தமிழீழ விடுதலைப்புலிகள் நோர்வே அதிகாரிகளுக்குக் கிளிநொச்சி வருமாறு அழைப்பு விடுத்திருந்ததாக அரசாங்கத் தரப்புத் தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன. (ச-5)


# இதயம் கனிந்த நன்றிகள்



மண்ணில் 26 06 1938

விண்ணில் 21 05 2008

அமரர்

குருசுமுத்து இம்மானுவேல் இராசநாயகம்

வேராக இருந்தீர் – விழுதாக நானிருந்து
நேராக உம்மை நிமிர வைக்கும் நேரம்
யாருக்கும் நான் பாரமில்லை
யார் தயவிலும் நான் வாழ்தல் இல்லை – என்றா?
நேராக நிமலன் அடி சென்றீர்
நித்தியத்தில் என்றும் வாழ்வீர்.

எனது பாசமிகு அன்புத் தந்தையார் இம்மானுவேல் இராசநாயகம் அவர்களின் இறுதி அஞ்சலி நிகழ்வில் பங்கு பற்றிய உற்றார், உறவினர், அயலவர்களுக்கும் மலர் வளையம் சாத்திய வலம்புரிக் குடும்பத்தினருக்கும், திருமறைக் கலாமன்றத்தினருக்கும், வெளிநாட்டில் உள்ள உறவினருக்கும், தொலைபேசியில் தொடர்பு கொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எனது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்ஙனம்
இ.நிரோஜன் (மகன்)

(C-1257)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.1 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.06.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.